பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 16 வியாழக்கிழமை (30-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:65

## 'டெங்கு' தொற்றிய ஒன்பது பேர் கடந்த 5 நாள்களில் கண்டுபிடிப்பு!

### குடாநாட்டில் தீவிரமாகப் பரவும் ஏதுநிலை

யாழ்ப்பாணம்,ஜன.30

குடாநாட்டில் 'டெங்கு'காய்ச்சல் தவிரமாகப் பரவுவதற்கான ஏதுநிலை காணப்படுவதாக சுகாதாரப் பகுதியினர் மீண்டும் எச்சரித்திருக்கின்றனர்.

யாழ். மாநகரசபைப் பிரதேசத்திலும் கோண்டாவில், திருநெல்வேலி, ஆனைக்கோட்டை, உடுப்பிட்டி ஆகிய இடங்களிலும் கடந்த ஐந்து தினங்களில் 'டெங்கு' காய்ச்சல் தொற்றிய ஒன்பது பேர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனர் என்று யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி உமா சிவபாதசுந்தரம் அறிவித்திருக்கிறார்.

சுகாதாரத் திணைக்களம் அண்மையில் யாழ்.ஆஸ்பத்திரிக்கு வழங்கிய டெங்கு காய்ச்சல் பரிசோதிக்கும் கருவி மூலம் மேற்குறிப்பிட்ட இடங்களில் டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டிருக்கின்றனர்.

மேற்கூறிய இடங்களில் நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த தீவிரமான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படாவிட்டால்

(14ஆம் பக்கம் பார்க்க)

குமாரவடிவேல், சிற்றம்பலம், மோகனதாஸ்

## துணைவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர் சிபாரிசு!

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர்களை பேரவை சிபாரிசு செய்திருக்கிறது.

நேற்றுப் பிற்பகல் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் துணைவேந்தர் பதவிக்கு சிபாரிசு செய்யப்படுவோர் வாக்களிப்பு மூலம் தெரிவுசெய்யப்பட்டனர்.

விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வி.குமாரவடிவேல் (62 விருப்பு வாக்குகள்), உயர்பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் (58 விருப்பு வாக்குகள்), யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகப் பீடாதிபதி பேராசிரியர் சு.மோகனதாஸ் (43 விருப்பு வாக்குகள்) ஆகிய மூவருமே துணைவேந்தர் பதவிக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றனர்.

பல்கலைக்கழக பேரவை இவர்க

(14ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களின் தனித்தேசம்

# கிழக்கில் நேற்று பிரகடனம்!

## முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகள்

முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் பின்வருவன என்று நேற்று ஒலுவிலில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

1) வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் தனியான அரசியல் சமூகம், தனியான தேசிய இனம் அல்லது தனியான தேசம் (Seprate nationality or nation) இங்கு தேசிய இனம் அல்லது தேசம் என்பது பொதுவான அரசியல உணர்வினால் பிணைக்கப்பட்ட பண்பாடு, கலாசார அம்சங்களில் தனித்துவமான மக்கள் கூட்டம் என்பதை குறிக்கின்றது.

2) வடக்கு - கிழக்கு பிரதேசம் முஸ்லிம்களின் பாரம்பரிய தாயகம்.

3) வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் தமது அரசியல் தலைவிதியினை தாமே தீர்மானித்துக்கொள்ளும் சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள்.

4) இன்றைய அரசியல் சூழலில், வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் செறிவாக வாழும் பிரதேசங்களை ஆள்புல எல்லையாக கொண்டதும், அரசியல் ரீதியில் சமத்துவமானதுமான ஒரு சுயாட்சி.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஒலுவில் பல்கலைக்கழகம் முன்பாக ஒன்று திரண்டு எழுச்சிக் கோஷம்

ஒலுவில்,ஜனவரி30

**நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்து கிழக்கில் நேற்று ஒன்று திரண்ட முஸ்லிம்கள் தங்களின் தனியான தேசியத்தையும் தனியான தேசத்தையும் (Seperate Nation) பிரகடனம் செய்தனர்.**

**ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக சமூகத்தின் ஆதரவுடன் நடைபெற்ற எழுச்சி நிகழ்வில் முஸ்லிம் மக்களின் இந்த அபிலாஷைகள் அடங்கிய பிரகடனம் வெளியிடப்பட்டது.**

எழுச்சிப் பேரணி மற்றும் முஸ்லிம் தேசப் பிரகடனம் ஆகியவற்றை ஒட்டி அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசம் விழாக் கோலம் பூண்டிருந்தது. பச்சைக் கொடி அலங்காரம் எங்கும் காணப்பட்டது.

அரச அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், வங்கிகள், பாடசாலைகள் ஆகியவை பெரும் பாலும் மூடப்பட்டே இருந்தன. வாகனப் போக்குவரத்தும் வெகு குறைவாகவே இருந்தது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் மற்றும் தென்னிலங்கையிலிருந்தும் முஸ்லிம்கள் வந்து இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். பல்கலை மாணவர்கள்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸ்ரின், சாந்த கொட்டகொட ஜேர்மனி பேச்சுக்களுக்கு இல்லை

கொழும்பு,ஜன.30

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே அடுத்து நடைபெறவிருக்கும் சமாதானப் பேச்சுக்களில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொடவும் கலந்துகொள்ளமாட்டார்கள் எனக் கூறப்படுகிறது.

அடுத்த சுற்றுச்சமாதானப் பேச்சுக்கள் ஜேர்மனியில் பெப்ரவரி 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொடவும் முன்னர் கலந்துகொண்ட சமாதானப் பேச்சுக்கள், சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அவர்கள் இருவரும் ஜேர்மனியில் நடைபெறும் பேச்சுக்களில் பங்குபெறச் செல்லமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து சமாதானச் செயல

(14ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ், சித்தார்த்தன் பிரதமரோடு பேச்சு!

### உள்ளூராட்சி சபைகள் பற்றி

கொழும்பு,ஜன.30

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கூட்டாகச் சந்தித்தனர்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கில் உள்ள உள்ளூ[illegible]ராட்சி சபைகளின் பதவிக்காலத்தை நீடிக்க வேண்டும் என்று அவர்கள் இருவரும் பிரதமரிடம் கோரினர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு விரைந்து வந்த இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிக் காலத்தை நீடிக்கவேண்டும் என்ற கோரிக்கையை ஆட்சேபித்து அதற்கான காரணங்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர தினமன்று களுத்துறைக் கைதிகள் உண்ணாவிரதம்

கொழும்பு,ஜன.30

இலங்கையின் சுதந்திரதினமான எதிர்வரும் 4ஆம் திகதி ஒருநாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக களுத்துறைச் சிறைக் கைதிகள் அறிவித்துள்ளனர்.

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து அன்றையதினம் சிறைச்சாலை வளவுக்குள் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டு துக்கதினமாக அனுஷ்டிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதா

(14ஆம் பக்கம் பார்க்க)

## கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.30

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களை மாற்றி அமைத்து அங்கு பொதுமக்களை மீளக்குடியமர்த்தும் விவகாரம் தொடர்பாக இந்திய இராணுவ நிபுணர் தெரிவித்திருக்கும் யோசனைக்கு பலத்த கண்டனங்கள் கிளம்பியிருக்கின்றன.

மக்களின் மீள்குடியமர்வுக்கு ஒரு நிபந்தனையாக விடுதலைப் புலிகளின் ஆயுத[illegible]களையும் யோசனைக்கு எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்து குடாநாட்டில் பல பொது அமைப்புகள் அறிக்கைகளை

(14ஆம் பக்கம் பார்க்க)





**புதுவை அன்பனின் 'கரை தேடும் ஓடங்கள்' நாடகத்தைப் பார்வையிட்ட தமிழீழத் தேசிய தலைவர் வே.பிரபாகரன், அதில் பங்குகொண்டு நடித்த கலைஞர்களைப் பாராட்டினார். நாடகத்தில் நடித்த யோ.விக்னேஸ்வரி என்ற சிறுமிக்கு தலைவர் பரிசில் வழங்குவதையும் சிறுமியுடன் எடுத்துக்கொண்ட படத்தையும் காணலாம்.**

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வரவேற்புப் பலகை மீண்டும் பொலீஸாரால் பிடுங்கப்பட்டது!

கொழும்பு,ஜன.30

மட்டக்களப்பு பிள்ளையாரடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் மீண்டும் நடப்பட்ட வரவேற்புப் பலகை நேற்று அதிகாலை பொலீஸாரினால் திரும்பவும் பிடுங்கப்பட்டது.

பிள்ளையாரடிப் பகுதியிலிருந்து வரவேற்புப் பலகையை எடுத்துச் சென்ற பொலீஸார், அது திரும்பவும் நடப்படுவதை தடுப்பதற்காக அதனை உடைத்துவிட்டனர் எனக் கூறப்படுகிறது.

வரவேற்புப் பலகை உடைக்கப்படவில்லை. பொலீஸார் அதனை கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர் என்று மற்றொரு தகவல் தெரிவித்தது.

'வீரம் விளையும் நிலம் அன்புடன் வரவேற்கிறது' என்ற வாசகம் அடங்கிய அந்த வரவேற்புப் பலகைக்கு என்ன நேர்ந்தது என்பது மர்மமாகவே உள்ளது. (ஐ)

# ஆறுமுக நாவலர் சிலை இன்று திறப்பு

யாழ்.இந்துக் கல்லூரி வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலை திரைநீக்கம் செய்யும் நிகழ்வு இன்று காலை 8.06 மணி தொடக்கம் 9.36மணி வரையான சுபவேளையில் கல்லூரியின் குமாரசுவாமி மண்டப முன்றிலில் இடம்பெறவுள்ளது. சிலையின் தோற்றத்தையே படத்தில் காண்கிறீர்கள். (ம-10)



# வரவேற்புப் பலகை சர்ச்சையை வளரவிடாது தீர்க்க வேண்டும்

## கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு,ஜன.30

மட்டக்களப்பு, பிள்ளையாரடியில் நிறுவப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் வரவேற்புப் பலகை தொடர்பாக எழுந்திருக்கும் சர்ச்சையை மேலும் வளரவிடாது தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்திருக்கிறது.

"வீரம் விளைநிலம் அன்புடன் வரவேற்கிறது" என்ற வாசகங்களுடனான அந்த வரவேற்புப் பலகை இரு வாரங்களுக்கு முன்னர் பிள்ளையாரடியில் நிறுவப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை இரவு பொலீஸாரால் அங்கிருந்து அகற்றப்பட்ட அந்த வரவேற்புப் பலகை செவ்வாய் நண்பகல் அதே இடத்தில் மீண்டும் நிறுவப்பட்டது தெரிந்ததே.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் இதுபோன்ற செயல்களை தவிர்ப்பது குறித்து இரு தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான டொல்சன் தெரிவித்திருக்கின்றார். (ஐ-4)

# ஒஸ்ரின் பெர்னாண்டோ - கருணா இன்று மட்டக்களப்பில் சந்திப்பு

வவுனியா,ஜன.30

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண மூத்த தளபதி கேணல் கருணாவும் இன்று மட்டக்களப்பு வவுணதீவில் முக்கிய சந்திப்பொன்றை நடத்துவர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொண்ட் புருஹோவ்டேயும் சந்திப்பில் கலந்துகொள்வர். விடுதலைப் புலிகளின் தரப்பில் கேணல் கருணாவுடன் வேறு சிலரும் கலந்து கொள்வர் எனத் தெரிகிறது. எனினும் அவர்களின் பெயர்கள் வெளியிடப்படவில்லை.

இச்சந்திப்பில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரும் இராணுவத் தரப்பு பிரதிநிதி ஒருவரும் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கும் கேணல் கருணாவுக்கும் இடையிலான சந்திப்பில் போர்நிறுத்த மீறல்கள் குறித்து, குறிப்பாக கிழக்கில் நடந்த மீறல்கள் குறித்து விரிவாக ஆராயப்படவிருக்கிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறும் இச்சந்திப்பில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களின் கண்காணிப்புக் குழுத் தலைவர்களும் கலந்துகொள்ளவிருக்கின்றனர். (ஐ-4)

# கொழும்பில் இன்று கூட்டம்

கொழும்பு,ஜன.30

வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒஸ்லோ மாநாட்டின் மூலம் கிடைத்த நிதியை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை தீர்மானிக்கும் ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று கொழும்பில் நடைபெறும்.

உலக வங்கியின் பிரதிநிதிகளும், சமாதான செயலகப் பிரதிநிதிகளும் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வர்.

வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகக் கிடைக்கும் நிதியத்தின் காப்பாளராக உலகவங்கி பங்கேற்றபின் முதல் தடவையாக இக்கூட்டம் நடைபெறுகிறது.

அகதிகள் மீள்குடியேற்றம், பாடசாலை அபிவிருத்தி மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் ஆகியவை தொடர்பாக இன்று பரிசீலனை செய்யப்படும் என அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று செய்தியாளரிடம் கூறினார்.

# ஆவரங்கால் பலசரக்குக்கடை தீயில் எரிந்து சாம்பர்!

அச்சுவேலி,ஜன.30

ஆவரங்கால் சந்தைக்கு அண்மையில் உள்ள பலசரக்கு கடையொன்று நேற்று முன்தினமிரவு தீக்கிரையானது.

பிரதான வீதியின் கிழக்குப் புறமாக அமைந்திருந்த ஆவரங்காலைச் சேர்ந்த எஸ்.பத்மநாதன்(பாலு) என்பவருக்குச் சொந்தமான பலசரக்குக் கடையே இவ்வாறு தீக்கிரையானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரவுவேளையில் பலத்த வெடிச் சத்தத்துடன் கடை எரிந்ததால் ஆவரங்கால் பகுதியில் பெரும் பதற்ற நிலை உருவாகியது. கடையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பட்டாசுகளும், எண்ணெய்ச்சாடிகளுமே வெடித்துச் சிதறியதாகக் கூறப்படுகிறது.

அச்சுவேலிப் பொலீஸார் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளை அடுத்து அயலிலுள்ள இடங்களுக்கு தீ பரவாமல் தடுக்கப்பட்டது. எனினும் சம்பந்தப்பட்ட கடையில் இருந்த அனைத்துப் பொருள்களும் முற்றாக எரிந்து நாசமாகின.

இந்த தீ விபத்துக்கு விஷமிகளின் செயலே காரணம் என்று கூறப்பட்டது. அச்சுவேலிப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-11-1778)

# நாட்டில் அதிகாரமற்ற 27 நிதி நிறுவனங்கள்

கொழும்பு,ஜன.30

பொது மக்களிடமிருந்து வைப்புப் பணம் பெற அதிகாரமற்ற நிதிநிறுவனங்களாக 27நிறுவனங்கள் நாட்டின் பல பகுதிகளில் இயங்குகின்றன. அந்த 27 நிறுவனங்களின் பெயர்ப்பட்டியலை மத்திய வங்கி வெளியிட்டிருக்கிறது.

அதிகாரமற்ற நிதி நிறுவனங்களின் பெயர்ப்பட்டியலை மத்திய வங்கி வெளியிட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனங்களின் பெயர்ப்பட்டியலையே மத்திய வங்கி இதுவரை வெளியிட்டு வந்தது. அதிகாரமற்ற நிதி நிறுவனங்கள் குறித்து பொதுமக்கள் மத்திய வங்கியிடம் விசாரித்ததை அடுத்தே பெயர்ப் பட்டியலை மத்திய வங்கி வெளியிட்டிருப்பதாக அதிகாரி ஒருவர் கூறினார்.

தெஹிவளையிலுள்ள ஓகந்த பினான்ஸ், ஓகந்த இன்வெஸ்ட்மன்ட், பூனியன பிளேஸிலுள்ள பாணந்துறை பினான்ஸ் அன்ட் என்டர் பிரைசஸ், ஸமார்ட் டேக் டுவோ ஸீபிட் டெட் ஆகியவையும் அவற்றில் அடங்கும். (ஐ)

# நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை வன்னிப் பகுதியிலும் தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்குடாநாட்டிலும் தென்னிலங்கையிலும் டெங்கு மற்றும் நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்களின் தாக்கம் அதிகரித்துள்ளதை அடுத்து வன்னிப் பிரதேசத்தில் மேற்படி நோய்களுக்கான 'வருமுன் காக்கும்' நடவடிக்கைகளை தமிழீழ சுகாதார சேவையினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்த நோய்த் தாக்கம் உள்ள பிரதேசங்களிலிருந்து ஏ-9 தரை வழிப் பாதையூடாகத் தினமும் அதிக எண்ணிக்கையான மக்கள் பயணம் செய்வதால் வன்னிப் பிரதேசத்திலும் நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இதனைக் கருத்திற்கொண்டே தமிழீழ சுகாதார சேவையினர் வருமுன் காக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்நோய்களின் தாக்கம் தொடர்பாக ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு வருகிறது. பாடசாலைகள் தோறும் பொதுவான கருத்தூட்டல் நிகழ்வுகள் மற்றும் சுற்றாடல் சுத்திகரிப்பு நடவடிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் அறிவுறுத்துதல் ஆகியனவும் இடம்பெற்றுவருகின்றன.

கடந்த 18ஆம் திகதி தொடக்கம் சுகாதார விழிப்புணர்வு நாள்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இச்செயற்பாடு துரிதமாக நடைபெற்று வருவதாக தமிழீழ சுகாதார சேவையின் கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-10)

# சொத்துக்களை மீளப்பெறல் தொடர்பான கருத்தரங்கு

## 'சிரான்' அலுவலகத்தில் நடந்தது

கிளிநொச்சி,ஜன.30

போரால் கைமாறிய சொத்துக்களை உரியவர்கள் தமக்குரியதாக்கிக் கொள்ளல் பற்றியதான கருத்தரங்கு நேற்று கிளிநொச்சியிலுள்ள 'சிரான்' அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழீழ நீதித்துறை, அரசியல்துறை பிரமுகர்கள், வடக்கு-கிழக்கின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த அரச அதிபர்கள், காணி அதிகாரிகள், நில அளவைத் திணைக்கள அதிகாரிகள், சட்டவாளர்கள், நீதிவான்கள் மற்றும் அநுராதபுரம், பொலன்நறுவை மாவட்டங்களின் நீதிவான்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் கொழும்பில் உள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆகியன இணைந்து இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்தன.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளினால் வீடுகள் மற்றும் காணிகள் போன்ற சொத்துக்களை இழந்த பொதுமக்கள் அவற்றை மீண்டும் சட்டரீதியாக தமதாக்கிக் கொள்ளும் வழிவகைகள் குறித்து அங்கு ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் படையினர் வசம் உள்ள தனியார் வீடுகள், காணிகளை உரியவர்களிடம் ஒப்படைப்பது குறித்தும் வெடிப்பொருள்கள் புதைக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளில் அவற்றை அகற்றி அங்கு அவர்கள் மீளக்குடியமர்வதற்கு வசதி செய்து கொடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கின் அடுத்த அமர்வுகள் எதிர்வரும் 10ஆம் 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (ஐ-4)

# யால தேசிய பூங்கா அதிகாரி சுட்டுக்கொலை!

கொழும்பு,ஜன.30

யால தேசிய பூங்காவின் பிரதம சுற்றிவளைப்பு அதிகாரி எச்.கே.சி. குமாரசிங்க இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் யால பூங்காவின் ஒரு பிரிவில் கஞ்சா சேனை ஒன்றைச் சுற்றிவளைக்க அதிகாரிகள் குழு ஒன்று சென்றபோதே இச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக இரண்டு சந்தேகநபர்கள் அந்த அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் திஸ்ஸமகாராம பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர். (ஐ)

# யாழ்.ஆஸ்பத்திரியில் மீண்டும் முறிவு,நெரிவு சிகிச்சைப் பிரிவு

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.போதனா வைத்தியசாலையில் சுமார் 15ஆண்டு கால இடைவெளிக்கு பின்னர் முறிவு, நெரிவு வைத்திய சிகிச்சைப்பிரிவு அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இச்சிகிச்சைப்பிரிவின் வைத்திய நிபுணராக டாக்டர் கே.உமாபதி நியமனம் பெற்று பதவி ஏற்றுள்ளார்.

பிரதி வாரம்தோறும் திங்கள், புதன்கிழமைகளில் முறிவு, நெரிவு வைத்தியத்துக்கான சிகிச்சைப்பிரிவு (கிளினிக்) இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் முறிவு, நெரிவு வைத்திய சேவையை பொது வைத்திய பிரிவே கவனித்து வந்தது. (ஐ-3-17-139-173)

# தாய் இலங்கையில் பிறந்திருந்தால் பிள்ளைகளுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை

## நாடற்றவர் என்ற நிலையைப் போக்கத் திருத்தச்சட்டம்

கொழும்பு,ஜன.30

தாய் இலங்கையில் பிறந்திருந்தால் அவரது பிள்ளைகள் இலங்கைப் பிரஜாவுரிமை பெற வழிவகுக்கும் திருத்தச் சட்ட மூலம் ஒன்று நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இச்சட்டமூலத்தின் மூலம் நாடற்றவர் என்ற நிலையில் இருக்கும் மலையக மக்கள் நன்மையடைவார்கள்.

நீதி, புத்தசாசன அமைச்சர் டப்ளியூ.ஜே.எம்.லொக்குபண்டார இச்சட்டமூலத்தைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார். நாடற்றவர்கள் என்ற நிலையை நீக்குவதற்கு கொண்டுவரப்பட்ட நல்லதொரு சட்டமூலம் இது என்று அவர் அப்பொழுது வர்ணித்தார்.

அமைச்சர் தனது உரையில் மேலும் கூறியதாவது-

இதுவரை காலமும், தகப்பன் இலங்கையில் பிறந்திருந்தால் மட்டுமே பிள்ளைகள் பிரஜாவுரிமை கோரலாம். தாய் இலங்கையில் பிறந்திருந்தாலும் பிள்ளைகளுக்கு பிரஜாவுரிமை கோரி விண்ணப்பிக்க முடியாத நிலையே இருந்தது.

இத்திருத்தச் சட்டமூலத்தினால் தாய், இலங்கையில் பிறந்திருப்பாராயின் பிள்ளைகள் பிரஜாவுரிமை கோர முடியும்.

பெண்களுக்கு சகல விடயங்களிலும் சமத்துவம்வழங்கப்பட வேண்டுமென பெண்கள் அமைப்புகளும் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றன. பொது அரசியல் அமைப்பிலும் பெண்கள் சமத்துவம் பற்றி முறையாகக் கூறப்பட்டுள்ளது. இத்திருத்தம் அரசியல் அமைப்புக்கும், சர்வதேச உடன்படிக்கைகளுக்கும் அமைவானதாகும்.

ஒருவரின் பிரஜாவுரிமை பரம்பரையானதா அல்லது பதிவு செய்யப்பட்டதா என்பதைக் கோரும் பிரிவு இனி பிறப்புச் சான்றுப் பத்திரத்தில் இடம்பெற மாட்டாது. இலங்கையர் என்ற பதம் மட்டுமே பதிவில் இடம் பெறும். இதற்கும் திருத்தச்சட்டம் வழிவகுக்கிறது.

தாய், தகப்பன் இருவரில் ஒருவராவது இலங்கைப் பிரஜையெனில் அவரது வழித்தோன்றல்கள் இலங்கைப் பிரஜையெனவே திருத்தச்சட்டத்தின் வாயிலாகக் கணிக்கப்படுவர்.

- இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## சைபிரஸ் நாட்டுக்கு புதிய தேசியகொடி

லண்டன்,ஜன.30

சைபிரஸ் நாட்டிற்கென புதிய தேசியக்கொடி உருவாக்கப்படுகின்றது. தேசியகீதமும் புதிதாக ஏற்படுத்தப்படவுள்ளது.

புதிய தேசியக்கொடி எப்படி இருக்கலாம் என்று ஓவியர்களை மாதிரிப் படங்களை வரைந்து அனுப்பும்படியும்-

தேசிய கீதத்துக்கான கவிதைகளை விரைவில் வரைந்து அனுப்பும்படி கவிஞர்களையும் - அரசு கேட்டுள்ளது.

புதிய தேசியக் கொடியை சிறுவர்கள்கூட இலகுவில் வரைந்துகொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும் என்றும் அரசு நிபந்தனை விதித்துள்ளது.

அடுத்த மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் தேசியக்கொடியும் தேசிய கீதமும் தமக்கு அனுப்பப்படவேண்டும் என்றும் அரசு அறிவித்துள்ளது. வருபனவற்றில் இருந்து தெரிவாகும் கொடியும் கீதமுமே இனிவருங்காலத்தில் நாட்டின் தேசியக் கொடியாகவும் தேசிய கீதமாகவும் இருக்கும். (ம)

## படகு கவிழ்ந்து பங்களாதேஷில் 28 பேர் பலி

டாக்கா,ஜன.30

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவின் அருகே ஓடும் தாவேஸ்வரி ஆற்றில் சென்றுகொண்டிருந்த ஒரு படகு கட்டுப்பாடிழந்து எதிரே வந்து கொண்டிருந்த சிறிய கப்பலுடன் மோதிக் கழவிந்தது. இந்த விபத்தில் படகில் பயணம் செய்த 28 பேர் உயிரிழந்தனர்.

கப்பலுடன் மோதியதும் படகு வேகமாக மூழ்க ஆரம்பித்தது. தண்ணீரில் மூழ்க இருந்தவர்களில் 22 பேரை உதவிப் பணியாளர்கள் விரைவாகச் செயற்பட்டு காப்பாற்றினார்கள். ஆனால், 28பேரை அவர்களால் காப்பாற்ற முடியவில்லை.

உயிரிழந்தவர்களில் 13பேரின் சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஏனைய சடலங்கள் ஆற்றின் நீரோட்டத்துடன் அடித்துச் செல்லப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 10 மீற்றர் ஆழத்தில் கிடக்கும் படகையும் மீட்கமுடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ம)



ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுப்பதை எதிர்த்து அங்குள்ள குர்டிஷ் இனத்தவர்கள் பக்தாத்தில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர். குர்டிஷ் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் அதிபர் சதாம் ஹுசைனின் படத்தைத் தாங்கியவாறு அமெரிக்காவுக்கு எதிராக கோஷமிடுவதைப் படத்தில் காணலாம்.

## அல்கெய்டா - ஈராக் இடையே தொடர்பு

### குற்றஞ்சாட்டுகிறார் பிரிட்டிஷ் பிரதமர்

ஈராக்குக்கும் அல்கெய்டா தீவிரவாத அமைப்புக்கும் இடையில் தொடர்பு இருக்கின்றது என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் நேற்று புதன்கிழமை தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் புஷ் செவ்வாயன்று காங்கிரஸில் ஆற்றிய உரையில் இது தொடர்பாகக் குறிப்பிட்டிருந்தார். அதற்கு அடுத்த நாள் பிளயர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

"அல்கெய்டா - ஈராக் இடையிலான தொடர்புகள் பற்றி எமக்குத் தெரியும். அந்தத் தொடர்புகளின் மிகத் துல்லியமான அளவுகள் குறித்து எம்மால் உறுதிப்படுத்த முடியாது" - என்று பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிளயர் தெரிவித்தார். நியூயோர்க்கிலும் வாஷிங்ரனிலும் செப்ரெம்பர் 11 இல் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் ஈராக்குக்கு பங்கிருப்பதற்கான ஆதாரங்கள் எவையும் இல்லை என்றும் அவர் சொன்னார்.

இதுகுறித்து பிரிட்டன் மேலதிகமாக ஆராய்ந்து வருகின்றது. ஈராக்குக்கு தீவிரவாத அமைப்புக்களுடன் நல்ல தொடர்புகள் இருக்கின்றன என்று பாதுகாப்புத் துறைச் செயலர் ஜியோவ் ஹுன் தெரிவித்தார். இதில் அல்கெய்டாவுடனான தொடர்புகள் கொஞ்சம் அதிகமானவை என்றார் அவர்.

நேற்றுமுன்தினம் அமெரிக்க காங்கிரஸில் உரையாற்றிய அதிபர் புஷ் சதாம் தீவிரவாதிகளை உருவாக்குவதற்கு அந்த அமைப்புக்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றார் என்று குற்றஞ்சாட்டினார். (ம)

## ஈராக்கில் உள்ள ஆயுதங்களின் விவரம் அமெரிக்கா அடுத்த வாரம் கையளிக்கும்

### அதிபர் புஷ் காங்கிரஸில் தெரிவிப்பு

நியூயோர்க்,ஜன.30

ஈராக் வசம் பேரழிவு தரும் ஆயுதங்கள் இருப்பதற்கான தேவையான ஆதாரங்களை அமெரிக்கா அடுத்த வாரம் ஐநாவிடம் கையளிக்கவுள்ளது. அதேநேரம் ஈராக் தன்னிடம் உள்ள பேரழிவு தரும் ஆயுதங்களைக் களைவதற்கு முன்வராவிட்டால் அதன் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கும் பன்னாட்டுக் கூட்டுப் படைகளுக்கு அமெரிக்கா தலைமைதாங்கும்.

- இவ்வாறு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு. புஷ் தெரிவித்துள்ளார். நாட்டின் காங்கிரஸ் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்கு ஈராக் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று திங்களன்று ஆயுதப் பரிசோதகர்கள் குழுத் தலைவர் ஹன்ஸ் பிளிக்ஸ் அறிவித்திருந்ததைத் தொடர்ந்து அமெரிக்க அதிபரின் இந்தக் கருத்து வெளிவந்துள்ளது.

முன்னதாக, ஹன்ஸ் பிளிக்ஸ் தனது அறிக்கையை பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்த பின்னர் - கடந்த 27 ஆம் திகதி - அன்றைய தினமே ஈராக் மீதான போர் குறித்து முடிவெடுக்கப்படும் என்று அதிபர் புஷ் தெரிவித்திருந்தார். அதன் காரணமாக அவரது இந்த உரை மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது.

"நாங்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால், அது குறித்து நீங்கள் தப்பபிப்பிராயம் கொள்ளத் தேவையில்லை. உலக அமைதிக்கும் எமது மக்களின் பாதுகாப்புக்கும் ஏதுவாக ஈராக் அதிபர் ஆயுதக்களைவுக்கு முழுமையாக உடன்படவில்லையாயின், அவரிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதற்கு கூட்டுப் படைகளுக்கு நாம் தலைமை தாங்குவோம்" - என்று அமெரிக்க காங்கிரஸ் முன் புஷ் தெரிவித்தார்.

ஈராக், ஐநா. ஆயுதப் பரிசோதகர்களுக்கு கணக்குக் காட்டாத ஆயுதங்களின் விவரத்தை அவர் பட்டியலிட்டார். சதாம் ஹுசைன் உலகத்தை ஏமாற்றுகின்றார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். ஆனால், அவரது உரை ஈராக் மீது போரைப் பிரகடனப்படுத்துவதாக இருக்கவில்லை. இருந்தாலும் அதனை நெருங்கிக் கொண்டிருப்பதாக அவர் உணர்த்தினார்.

ஈராக்குக்கும் அல்கெய்டா அமைப்புக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாகவும் அந்த உரையின்போது புஷ் தெரிவித்தார்.

இந்த உரையில் காங்கிரஸ் உறுப்பினர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் வகையில், பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் வரி போன்ற விடயங்கள் பற்றியே புஷ் அதிகம் பேசினார். ஏனெனில் அவரது பொருளாதாரக் கொள்கைகளை எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி மிகக் கடுமையாகக் கண்டித்து வருகின்றது. ஆனாலும் ஈராக் விடயத்தில் புஷ்ஷின் கொள்கையை அது ஆதரிக்கின்றது. (ம)

## பஸ்ஸை திருடிய பயணி

நண்பர் வீட்டுக்குச் சென்றுவிட்டு தாமதமாக ரயில் நிலையத்துக்கு வந்ததால் ரயிலைத் தவறிவிட்ட ஒருவர், வீடு திரும்புவதற்காக பஸ்ஸைத் திருடிய சம்பவம் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இடம்பெற்றுள்ளது.

25 வயதான அந்த வாலிபர் ரயிலைத் தவறவிட்டதும், வீடு திரும்புவதற்கு வேறு வழியே இல்லை என்ற நிலையில் ரோண்ட் செயின்டேமேக்சன்ஸ் பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸைத் திருடிக் கொண்டு வீடு திரும்பினார். தன் வீட்டுக்கு அருகே வீதியில் பஸ்ஸை நிறுத்திவிட்டு இறங்கியதும் பொலீஸார் அவரைக் கைதுசெய்தனர்.

அதே இடத்திலிருந்து ஏற்கனவே 3 முறை பஸ்ஸைத் திருடி அதைச் செலுத்திக்கொண்டு தன் வீடு அருகே நிறுத்திவிட்டு வீடு திரும்பியதாகவும் அவர் ஒப்புக்கொண்டார். (ம)




ஐவரிகோஸ்டில் செவ்வாயன்று புதிதாக இடம்பெற்ற மோதலில் 10பேர் பலியாகினர். பிரான்ஸ் ஏற்பாட்டில் அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திட்டதனால் அதிருப்தி அடைந்தவர்களே இந்த மோதல் ஏற்படக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. பிரான்ஸின் தலையீட்டை விரும்பாதவர்கள் அமெரிக்காவின் தலையீட்டைக் கோரி வீதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றனர்.



ஈராக் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் குழுத் தலைவர் ஹன்ஸ் பிளிக்ஸ் பாதுகாப்புச் சபையில் அறிவித்ததைத் தொடர்ந்து, ஈராக் மீதான தாக்குதலுக்கு தீவிர ஏற்பாடுகளை அமெரிக்கா செய்து வருகின்றது. குவைத்தில் நிலைகொண்டுள்ள அமெரிக்க படையினரின் அலுவலகம் ஒன்றில் போர்த் தயார்ப்படுத்தல்கள் துரிதகதியில் இடம்பெற்றுக்கொண்டிருப்பதையும், ஈராக்குடனான குவைத் எல்லையில் அமெரிக்கத் துருப்பினர் தாக்குதல் பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதையும் படத்தில் காணலாம்.

## இஸ்ரேலிய பொதுத்தேர்தல்: ஷெரோன் மீண்டும் வெற்றி

இஸ்ரேலில் நேற்றுமுன்தினம் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் தற்போதைய பிரதமர் ஏரியல் ஷெரோனின் லிகுட் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இதனால், மீண்டும் ஷெரோன் பிரதமராகும் நிலை தோன்றியுள்ளது.

தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் பேசிய ஷெரோன், அனைத்துக் கட்சிகளையும் இணைக்கும் தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கு அழைப்பு விடுத்தார்.



வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் ஏரியல் ஷெரோனும் (வலது) பெஞ்சமின் நெதன்யாகுவும் (இடது).

மற்றோர் உலக அரங்கில் 8ஆம் பக்கத்தில்

130 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் லிகுட் கட்சி 37 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. அதற்கு அடுத்த படியாகத் தொழிற் கட்சி 19 ஆசனங்களை மட்டுமே கைப்பற்றியுள்ளது. ஏனைய ஆசனங்களை அங்குள்ள 11 கட்சிகள் பகிர்ந்து கொண்டுள்ளன.

இதனால், அரசமைப்பதற்கான பெரும்பான்மை ஷெரோனுக்குக் கிடைக்கவில்லை. கடந்த முறையைப் போன்றே இம்முறையும் கூட்டணி அரசு ஒன்றை அமைக்கும் நிலைக்கே அவர் தள்ளப்பட்டுள்ளார். ஆனால், கடந்த முறை அவருடன் இணைந்து ஆட்சியில் பங்கேற்ற முக்கிய கட்சியான தொழிற்கட்சி இம்முறை கூட்டணி அரசில் பங்கேற்கப் போவதில்லை என்று தெரிவித்துவிட்டது. எனவே ஷெரோன சிறிய மதவாதக் கட்சிகளுடன் இணைந்தே ஆட்சியமைக்கவேண்டி வரும். (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சுத்த இன ஜேர்மன் ஒருவயது நிரம்பிய சனல் கடாவும், 10சோடி தேக்கம் கதவுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A.G. செல்வம், 107, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்(13854)

## கோழிக்குஞ்சு விநியோகம

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 30-01-2003, 06-02-2003 திகதிகளில் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13783)

## திருமண சேவை

1958, பூராடம், பாவம் குறைந்த, செவ்வாய்8, படித்த, அழகான, Sponser தகைமையுடைய, கன்டா மணப் பெண்ணுக்கு ஆங்கில அறிவுடைய மணமகன் தேவை. தொடர்பு: துரை விமலா, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம். (13842)

## தவறிவிட்டது

தங்க கைச்சங்கிலி ஒன்று 27.01.2003 திங்கட்கிழமை நல்லூர் இராஜ வீதிக்கும் சட்டநாதர் கோயில் வீதியூடாக திருநெல்வேலி சிவன் அம்மன், பலாலி வீதி, இந்து மகளிர் ஒழுங்கைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 62, இராஜவீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (13860)

## ஓவியப் போட்டி

மானிப்பாய் லியோக்கழகம் பாடசாலை மாணவர்களிடையே 'சமாதானம்' தொடர்பாக ஓவியப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

வயது வகுப்பு வேறுபாடு இன்றி நடத்தப்படவுள்ள ஓவியப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாக அடுத்தமாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-11)

## புதிய பாதையில் மினிபஸ் சேவை

தென்மராட்சி,ஜன.30

தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர் யாழ்ப்பாணம், தென்மராட்சி ஆகிய இடங்களில் கல்வி பயிலும் கச்சாய், கெற்பேலி, போக்கட்டி, அல்லாரை, பாலாவி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோரின் நலன்கருதி கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கான புதிய மினிபஸ் சேவையினை ஆரம்பித்துள்ளனர்.

தினமும் காலை 7.30 மணிக்கு கொடிகாமம் பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் மினிபஸ் கச்சாய் வீதியூடாக வரணையடிசந்தி, அல்லாரை, மீசாலை சந்தி மார்க்கமாக யாழ்ப்பாணம் சென்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு இதேமார்க்கமாக கொடிகாமம் சென்றடையும் என சங்கத் தலைவர் மெ.அற்புதராசா தெரிவித்தார். (ம-117)

# 'ஞானச்சுடர்' வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் இவ்வார நிகழ்வாக நாளை வெள்ளிக்கிழமை 'ஞானச் சுடர்' தை மாத வெளியீடு இடம்பெறும்.

வெளியீட்டுரையை செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களும், அதற்கான மதிப்புரையை ஆ.சிவநாதன் ஆசிரியர் அவர்களும் நிகழ்த்துவர். (ம)

# தகவல் தரவும்

சாவகச்சேரி கெருடாவில் கந்தசாமி கோயிலுக்குச் சொந்தமான சூரன், சிங்கன், தாரகன் ஆகிய சூரன்போருக்குரிய அசுரர்களின் தலைகள் காணாமற்போய்விட்டன. இது பற்றிய தகவல் ஏதும் தெரிந்தவர்கள் தயைகூர்ந்து தர்மகர்த்தா, கெருடாவில் கந்தசாமி கோயில், சாவகச்சேரி என்னும் முகவரிக்கு அறியத்தரவும்.

(13851) - தர்மகர்த்தா

# 31ஆவது நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலையின் உப அதிபர்
**திரு.திருச்செல்வவிநாயகமூர்த்தி**
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
**கணபதிப்பிள்ளை தங்கம்மா**
அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

தோற்றம் 28-09-1917 மறைவு 31-12-2002

யா/மாதகல் சென்.யோசவ் ம.வி.,
யா/மாதகல் நுணசை வித்.

(13852)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 01 - 10 - 1936



மறைவு 31 - 12 - 2002

அமரர்
**தம்பிமுத்து இராசகுரு**

ஆனதோ முப்பத்தொன்று அந்தோ நீர் எம்மைப் பிரிந்து
வானுலகம் சென்றுவிட்டீர் வாழ்வில் உம்மை மறப்போமா?
ஞானமொழி பேசும் மாமாவும் மருகனைத் தவிக்கவிட்டு!
ஏனோ மறைந்து விட்டீர்! ஏங்கியே நாமிங்கு தவித்தே
அழுகின்றோம்.
காலனுமைக் கவர்ந்து சென்றானோ கருணை இன்றி
ஞாலமுள்ளவரை உம் நினைவு என்றும் நீங்காது நிலைத்திருக்கும்!

உரும்பிராய். (C/26276) பெறாமகள், மருமகன்.

# அந்தியேட்டி அழைப்பு





திருமதி **ஜெயராசா பத்மினி** ஜனனம்: 26.08.1974
செல்வி **ஜெயராசா ஜெனித்தா** ஜனனம்: 28.10.1996
செல்வன் **ஜெயராசா ஜெயந்தன்** ஜனனம்: 12.01.2002

மரணம்: 08.07.2002

மணமேடை கண்டு மகவிரண்டு பெற்று
மகிழ்ந்திருந்தவேளை, ஆசையாய் பெற்ற மகன்
சுவாசிக்க வைத்த "சிலிண்டர்" மூவர்க்கும் எமனானதோ?

எம் செல்வங்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (30.01.2003) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இதனை நினைவு கூருமுகமாக இன்று நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வெள்ளாப்பற்றடி, அல்வாய் வடமத்தி,
வியாபாரிமூலை.

(13843)

தகவல்: ஜெயராசா (கணவர் - ஜேர்மனி),
திருமதி பத்மாவதி (தாய்).

# தேவை

*பெண் தொலைபேசி இயக்குநர் தேவை.*
நேரில் தொடர்பு கொள்ளவும்.
**நாதன்ஸ் தொலைத்தொடர்பு நிலையம்**
*பிரதான வீதி, பருத்தித்துறை.*

(13849)

## யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்

# வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2003

இடம்: **உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானம்**
காலம்: **இன்று(30.01.2003) வியாழக்கிழமை பி.ப. 1.30 மணி**
தலைமை: **திரு.க.கனகராசா** *(அதிபர் )*
பிரதம விருந்தினர்: **திரு.ந.இரவிராஜ்**
*(நாடாளுமன்ற உறுப்பினர் - யாழ். மாவட்டம்)*
சிறப்பு விருந்தினர்: **திரு.சு.சுந்தரசிவம்**
*(பிரதிக் கல்விப் பணிப்பாளர் - கல்வி நிர்வாகம், வலிகாமம்)*
கௌரவ விருந்தினர்: **திரு.சண்முகராசா அரவிந்தன்**
*(யா/மாநகரசபை உதவி மேயர், த.வி.கூ. அமைப்பாளர், வடமராட்சி)*
**திரு. இ.கனகலிங்கம்** *(பழைய மாணவன் - வலி. வடக்கு பிரதேச சபை)*

✪ *அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.* ✪

*உரும்பிராய்.* (13848) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# Executive Wanted

***If You can shoulder the challenge, we have a vacancy....***

We are an Agency for a prominent Global Organisation. We are associated with Air Express , Travel & Tours and Freight Business.

We have an Opening for a dynamic Male/Female to manage the overall functions of our office situated in the heart of the Jaffna town.

The ideal candidate should be an ambitious go-getter with high personal motivation and talent. He should be able to achieve assigned sales targets, cost controls as well as attend to the administrative matters. Ability to communicate excellently in English and good public relations skill is essential. Field Sales experience in Freight forwarding (Exports) or an Air Express Company will be a definite advantage. You should also meet the following requirements:

Age: : 24-30 Years
Professional
Qualifications: A Degree or part Qualification from a recognized institution.
Pre-requisites: Strong PC Skills, Ability to adopt a proactive approach, task & goal oriented with the commitment to quality and meeting light deadlines.

The chosen candidate could look forward to attractive earnings. Salary negotiable.

We invite interested candidates to forward their Personal Profiles/CV's with the names of two non-related referees together with a passport size photograph, within 10days of this advertisement to the address below. All applications will be treated in strict confidence and our correspondence will be restricted to the candidates called for interviews. Canvassing will cause disqualification.

**Cosmos Marketing Services,**
No.200, K.K.S.Road, Jaffna.

(C-26275)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 - 07 - 1958



இறப்பு 09 - 02 - 2002

**திருமதி சிவநாதன் தயாநிதி**

திதி: 30.01.2003

அன்பின் இருப்பிடமே பாசத்தின் பிறப்பிடமே
இன்று நீ எம்மைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
எங்கள் இதயத்தில் என்றும் நீயிருப்பாய்
உந்தன் ஆத்ம நிறைவுக்கு ஆண்டவனைப்
பிரார்த்திப்போம்.

*'தயாநிதி இல்லம்'*
*புதிய செம்மணி வீதி,*
*வேளாதோப்பு, கல்வியங்காடு*

தகவல்:
திரு.தா.இராமச்சந்திரன் (STR)
உறவினரும்.
(13835)

உதயன்

## நம்பியார் மாயை

யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டு, தமது பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து துரத்தப்பட்டு, ஏதிலிகளாக வாழும் எமது மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியேற அனுமதியுங்கள். அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதன் மூலம் இயல்பு நிலையைத் தோற்றுவியுங்கள். நெருக்குவாரமற்ற - இயல்பான - சூழ்நிலையில் அவர்கள் சுதந்திரமாக வாழ அனுமதியுங்கள் - இப்படித்தான் புலிகள் வற்புறுத்தி வருகின்றார்கள்.

தற்போதைய சமாதான முயற்சிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் இருந்தே புலிகள் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்தது இதைத்தான்.

"யுத்தத்தை நிறுத்துங்கள்; இயல்பு நிலையை ஏற்படுத்துங்கள். எமது மக்கள் மீதான நெருக்குவாரங்களை அகற்றுங்கள். அவர்களுடைய அன்றாட - அவசர - மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீருங்கள். அதன்பின்னர் அரசியல் தீர்வுக்கான வழிமுறைகள் குறித்து ஆற அமர இருந்து பேசலாம்" - என்றுதான் புலிகள் கூறிவந்தார்கள். அதை பிரதமர் ரணிலின் தலைமையிலான அரசு ஏற்றது. அதனால் சமாதான முயற்சிகள் முகிழ்ந்தன.

ஆனால், நடந்தது என்ன?

போர் நிறுத்தப்பட்டது; யுத்தத்தின் சத்தம் ஓய்ந்தது; கனன்று கொண்டிருந்த துப்பாக்கிகள் அடங்கின; அவலச் சாவுகள் அடியோடு அகன்றன. எனினும், அவற்றிற்கு அப்பால் எதுவுமே நடக்கவில்லை; எதிலுமே முன்னேற்றமில்லை.

ஏதிலிகளாக அலையும் மக்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. அபிவிருத்தி நடவடிக்கைகள், உதவித் திட்டங்கள் எவையுமே குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் காணவில்லை.

யுத்தத்தை நிறுத்திவிட்டு, காலத்தை இழுத்தடிக்கும் நாடகம் அரங்கேறுவதாகவே மக்கள் எண்ண வேண்டிய சூழ்நிலை.

இந்தக் கட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமரும் மனிதாபிமான விவகாரத்தை இராணுவச் சிக்கலாக்க முயல்கின்றது படைத்தரப்பு.

இந்த விடயத்தை இராணுவப் பிரச்சினையாகத் திரிபுபடுத்தி, பின்னர் அதனை ஓர் இராணுவச் சமநிலை விவகாரமாக மாற்றி, அதனை பெரும் சிக்கலுக்கு உள்ளாக்கும் கைங்கரியத்தை முதலில் ஆரம்பித்தவர் வடபகுதி இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா. அவருக்கு இந்தத் திட்டத்துக்கான 'ஐடியா' கொடுத்தவரே இந்தியாவின் ஓய்வுபெற்ற மூத்த இராணுவ அதிகாரியான ஜெனரல் சதீஷ் நம்பியார்தான் என்ற உள்வீட்டுத் தகவல் இப்போது கசியத் தொடங்கியுள்ளது.

கடந்த மாதம் ஜெனரல் சதீஷ் நம்பியார், யாழ்ப்பாணம் சென்று பலாலியில் ஜெனரல் பொன்சேகாவுடன் இரண்டொருநாள் தங்கிநின்று, பேச்சு - கலந்தாலோசனை - நடத்திவிட்டுச் சென்றிருந்தார்.

அந்தச் சந்திப்பு நடந்து இரண்டொரு நாள் கழிந்த பின்னரே, உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு அனுமதிப்பதையும் புலிகளின் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்பதையும் நிபந்தனையாகத் தொடர்புபடுத்தும் அறிக்கை, ஜெனரல் பொன்சேகாவிடம் இருந்து வெளிவந்தது.

அதாவது, மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினையை இராணுவ விவகாரமாக மாற்றும் மூல உத்தி ஜெனரல் நம்பியாரின் மூளையில் உதித்ததே என்ற ஐயத்தை ஏற்படுத்தும் ஆதாரங்கள் வெளிப்படத் தொடங்கியுள்ளன.

இந்தச் சூழ்நிலையில், இது விடயத்தில் - அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் கருத்து முரண்பாடு தீவிரமடைந்தது.

'அக்கட்டத்தில்தான், இப்பிரச்சினை தொடர்பாக சர்வதேச இராணுவ நிபுணர்களின் ஆலோசனை பெறுகின்றோம். கொஞ்சம் பொறுங்கள்!' என்ற கோரிக்கை அரசுத் தரப்பில் இருந்து வந்தது. சரி என்று காத்திருந்தார்கள் புலிகள்.

பிரச்சினைக்கு 'ஐடியா' கொடுத்தவரிடமே, பிரச்சினை குறித்து நிபுணத்துவக் கருத்துக் கேட்டால் அவர் என்ன பதில் தருவார்? தாம் தோற்றுவித்த பிரச்சினையை நியாயப்படுத்தும் விதத்தில்தானே அது இருக்கும்?

அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கின்றது. பிள்ளையைக் கிள்ளிவிட்டவரிடமே தொட்டிலையும் ஆட்டச் சொல்லிக் கேட்பது போன்றதுதான் இது.

நம்பியார் மாயையிலிருந்து அரசும் சிங்களத் தரப்பும் இறங்கி வந்தால்தான் இப்பிரச்சினைக்குச் சுமுகத்தீர்வு கிட்டும்.

# 'யுனிசெவ்' அமைப்பின் பணிப்பாளர் இலங்கைக்கு 3 நாள்கள் விஜயம்

## யாழ்ப்பாணத்துக்கும் வருகின்றார்

கொழும்பு,ஜன.30

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு மறுவாழ்வு வழங்கும் திட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக 'யுனிசெவ்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கரோல் பெல்லாமி இன்று இலங்கை வருகின்றார்.

மூன்று தினங்கள் இலங்கையில் தங்கியிருக்கும் அவர் பிரதமர், வெளிவிவகார அமைச்சர், கல்வி கலாசார அமைச்சர், சுகாதார அமைச்சர் ஆகியோரை இன்று சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

நாளை காலை 7.30 மணிக்கு ஹெலிமூலம் கிளிநொச்சி செல்லும் அவர், முதலில் அரச அதிபரைச் சந்திப்பார். அதன் பின்னர் 'சகல பிள்ளைகளுக்கும் கல்வி' என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைக்கும், வெண்புறா அமைப்பு அலுவலகத்துக்கும் செல்லும் அவர், தொடர்ந்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுவார்.

ஏ-9 வீதி வழியாக பளைக்குச் செல்லும் அவர், பளை மகாவித்தியாலயத்துக்கு விஜயம் செய்வார். பின்னர் யாழ்ப்பாணம் வந்து யாழ்.அரச அதிபரை சந்திப்பார். அன்றே கொழும்பு திரும்புவார்.

மறுநாள் கொழும்பில் குழந்தைகள், பெண்கள் பாதுகாப்பு நிலையத்துக்குச் செல்லும் அவர், மாலை ஜனாதிபதியையும் சந்திப்பார்.

(ம-3)

# சமாதானச் சூழ்நிலை காரணமாக எமது செயற்பாடுகள் குறைந்துவிட்டன

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு யாழ்.வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.30

தற்சமயம் உருவாகியுள்ள சமாதானச் சூழ்நிலை காரணமாக எமது அமைப்பின் பெரும்பான்மையான செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுவிட்டன. எனினும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமானப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.அலுவலகத்தின் புதிய வதிவிடப் பிரதிநிதி ஹான்ஸ் பீற்றர் ஹென்றிச் தெரிவித்தார்.

யாழ்.அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது சமாதான சூழ்நிலை ஏற்பட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். இக்காலப்பகுதியில் மாறும் நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே எமது நடவடிக்கைகளைக் கொண்டு செல்லவுள்ளோம்.

போர்க்கால சூழ்நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை செய்வதற்குரிய அதிகாரம் எமக்கு உண்டு.

எம்மால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுவந்த பல செயற்றிட்டங்களை அரச மையங்களிடம் ஒப்படைத்துள்ளோம். குறிப்பாக மட்டக்களப்புப் பகுதியில் எம்மால் மேற்கொள்ளப்பட்டுவந்த குடிதண்ணீர் வழங்கல் திட்டங்களும், கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த நடமாடும் சுகாதார சேவைப் பணி என்பவற்றை அந்தந்த அரச மையங்களிடம் ஒப்படைத்துள்ளோம்.

ஆனால், வன்னிப் பகுதியில் எமது அமைப்பால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற திட்டங்களைப் பொறுப்பேற்பதற்கு அரச மையங்கள் தயாராக இல்லாத காரணத்தினால் அப்பகுதியில் எமது பணி தொடர்ந்தும் இடம்பெற்றுவரும்.

அண்மையில் தாய்லாந்தில் அரசிற்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களின் போது 'காணாமற்போனோர்' விடயம் தொடர்பாக எமது அமைப்பு கூடுதலான கவனம் செலுத்தவேண்டும் என இருதரப்பாலும் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் இரு பகுதியினரும் சுதந்திரமான குழு ஒன்றை நியமித்து விசாரணைகளை மேற்கொண்டால் அதற்கான பங்களிப்புகளை தாங்கள் வழங்கத் தயாராகவுள்ளதாக எமது தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இன்றைய சமாதானச் சூழ்நிலையில் எமது அமைப்பின் பணி நடுநிலையானதாகவே இருக்கும். இந்த வகையில் இவ்வருடம், கைதிகள் பரிமாற்றம் மற்றும் பராமரிப்பு, போக்குவரத்துப் பாதைகளில் குறிப்பாக முகமாலை, ஓமந்தை, உயிலங்குளம் ஆகிய இடங்கள் ஊடாக மக்கள் சீரான பயணத்தை மேற்கொள்ளவதற்குப் பாதுகாப்பளித்தல், காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை நாட்டுமக்களிடையே பரப்புதல் போன்ற பணிகளையே நாம் தொடர்ந்து மேற்கொள்ள உள்ளோம்.

ஏ-9 பாதையை 24மணி நேரமும் மக்களின் பாவனைக்கு திறந்துவிடுவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தடைக்கல்லாக இருந்து வருகின்றது என அரசு மற்றும் விடுதலைப் புலிகளின் தரப்புக்களால் தெரிவிக்கப்பட்டு வருவதாக வெளியாகும் செய்திகள் தொடர்பாகச் செய்தியாளர்கள் கேட்டபோது -

இதுவரையும் இத்தகைய கோரிக்கை எதனையும் இருதரப்பினரும் உத்தியோகபூர்வமாக எம்மிடம் விடுக்கவில்லை. அவ்வாறானதொரு தேவை இருதரப்புக்கும் ஏற்படுமாயின் இது தொடர்பாக எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமட்டத்து அது பற்றிப் பரிசீலனை செய்யப்படும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் இதுவரை காலமும் யாழ். மாவட்ட வதிவிடப் பிரதிநிதியாக பணியாற்றிய செஸில் க்றொஸ் (CECILE CROS), இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர் டனா லிஸ்லி மற்றும் செயற்கை அவயங்கள் நிபுணர் அன்ட்கு சிமித் ஆகியோரும் பங்குபற்றினர்.

(ம-5)

## திறந்த பல்கலை இயற்கை விஞ்ஞான பீடத்தில்

# பதிவுசெய்து 4 மாதங்களாகியும் கற்கைநெறி ஆரம்பிக்கவில்லை

## பணம் செலுத்திய மாணவர்கள் நிலை பரிதாபம்

யாழ்ப்பாணம்,ஜன.30

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தின்மூலம் இயற்கை விஞ்ஞான பீடத்தின் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்துப் பதிவினை மேற்கொண்ட மாணவர்களுக்கு நான்கு மாதங்கள் கடந்த நிலையிலும் இன்னும் விரிவுரைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் இக்கற்கைநெறிகளுக்கு (பௌதிக விஞ்ஞானமாணி, கல்வியியல்மாணி) விண்ணப்பித்த சுமார் 70 மாணவர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. பின்னர் கடந்த ஒக்ரோபர் மாதம் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இன்று வரையும் கற்கைநெறி தொடர்பான விரிவுரைகள் இங்கு ஆரம்பிக்கப்படாதபோதும் இலங்கையில் உள்ள ஏனைய பிராந்திய நிலையங்களில் விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இக்கற்கைநெறிக்கு அரையாண்டுக் கட்டணமாக 7 ஆயிரம் ரூபாயைச் செலுத்திய மாணவர்கள் இதனால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இதேவேளை -

மேற்படி கற்கைநெறிகளை ஆரம்பித்தாலும் அதற்குரிய செயன்முறை வகுப்புகளை நடத்துவதற்கான ஆய்வுகூட வசதிகள் இல்லாமையும் இதற்கான காரணங்களில் ஒன்று என்று தெரியவருகிறது. ஆயினும், சில நாள்களுக்கு முன்பு கொழும்பில் இருந்து வருகைதந்த குழுவொன்று வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆய்வுகூடத்தைப் பார்வையிட்டு திருப்தி தெரிவித்தபோதும் இன்னமும் கற்கைநெறி ஆரம்பிக்கப்படாமை குறித்து மாணவர்கள் மத்தியில் பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன. ம-10-72)

### நாளை

தை 17
வெள்ளிக்கிழமை
(31.01.2003)
திதி : சதுர்த்தசி
பிற்பகல் 5.06 வரை.
நட்சத்திரம் : உத்தராடம்
பின்னிரவு 1.47 வரை.
சுபநேரம் : 6.36 - 8.06
ராகுகாலம் : 11.06 - 12.36
(பழைய நேரப்படி.)

### உதய வாக்கு

சட்டென்று பதில் உரைப்பவனுக்கு அறிவு மட்டம்.

# சர்வமத குருமார் பங்கேற்கும் கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம்,ஜன.30

தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு மேலும் வலுவூட்டும் வகையில், சமய முன்னேற்ற நல்லுறவு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் சர்வமத குருமார்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் ஒன்று இன்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் தென்னிலங்கையில் இருந்து நேற்றுமுன்தினம் யாழ். வருகைதந்த 84 பௌத்த குருமார்கள் உட்பட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்து மற்றும் கிறிஸ்தவக் குருமார்களும் மௌலவிகளும் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன அனுசரணையுடன் புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவின் எண்ணக்கருவிற்கு அமைய மனிதவள அபிவிருத்திப் பணிப்பாளர் எஸ்.நல்லையா இக்கலந்துரையாடலுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதானப் பேச்சின் முன்னேற்றங்கள் மற்றும் யாழ்.குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

முன்னதாக நேற்றுமுன்தினம் யாழ். வந்த 84 பௌத்த குருமார்கள் நேற்று நயினாதீவு நாகவிகாரைக்கு விஜயம் செய்தனர். பின்னர், குருநகர்ப் பகுதிக்குச் சென்று அங்கு பின்தங்கிய பகுதிகளைப் பார்வையிட்டனர். (ம-8)

## ஆன்மிக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜன.30

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆசிரியர் ஜெ.கோகலே 'கந்தரனுபூதி' என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றுவார். (ம)

# பெரியவிளான், இளவாலைக்கு விரைவில் 24 மணிநேர மின்சாரம்

## இணைப்பு வேலைகள் துரிதம்

யாழ்ப்பாணம்,ஜன.30

பண்டத்தரிப்பு - கீரிமலை வீதியூடாக பெரியவிளான் மற்றும் இளவாலைப் பகுதிகளுக்கு 24 மணிநேர மின்சாரத்தை வழங்குவதற்கான மின் இணைப்பு வேலைகளை மின்சார சபையினர் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஆரம்பகட்டமாக பண்டத்தரிப்பு-கீரிமலை வீதியூடாக இளவாலை வரை புதிய மின்கம்பங்கள் நடப்பட்டு உயர் அழுத்த மின் கேபிள்களும் பொருத்தப்பட்டுள்ளன.

விரைவில் இளவாலைப் பகுதியில் மின்மாற்றி ஒன்று பொருத்தப்பட்டு முதலில் இளவாலைப் பகுதிக்கு 24 மணிநேர மின் விநியோகம் வழங்கப்படவுள்ளதாகவும் ஏனைய பகுதிகளுக்கான சாதாரண மின் இணைப்பு வேலைகள் முடிவுற்றதும் அப்பகுதிகளுக்கும் 24மணிநேர மின்விநியோகம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

இதுவரை மின்சாரம் வழங்கப்படாமல் இருந்த, இளவாலை புனித யாகப்பர் ஆலயத்திற்கும் இளவாலை பொலீஸ் நிலையத்திற்கும் இடைப்பட்ட வீதிக்கும் விரைவில் மின் இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இளவாலைப் பகுதிக்கு 1996 ஆம் ஆண்டு முதல் தனியான மின் பிறப்பாக்கிமூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

### மெய்வன்மைப் போட்டி

இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக தமிழ்க் கூட்டமைப்பு யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரியும் சிறப்புவிருந்தினராக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு.கே. ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளும் கலந்துகொள்வர். (ம-8)


## காணி அல்லது காணியுடன் வீடு தேவை

யாழ்ப்பாணம் குருநகரை அண்டிய பகுதியில் காணி அல்லது காணியுடன் கூடிய வீடு தேவை.

தரகர் இன்றி தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

அ.றமேஷ் *(அனலா)*,
*21, முதலாம் குறுக்குத் தெரு,*
(13798) *குருநகர், யாழ்ப்பாணம்.* **T.P.No. 077 7049995**


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

நயினை தாயின் மடியில் 14 - 04 - 1916



நயினை நாயகி அடியில் 31 - 12 - 2002

நயினை

### திருமதி கணபதிப்பிள்ளை நாகம்மா

31. 12. 2002 அன்று சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தும் துயரத்தில பங்குகொண்ட அனைவருக்கும் மற்றும் 26. 01. 2003 ஞாயிற்றுக்கிழமை வில்லூன்றித் தீர்த்தக்கரையில் நடைபெற்ற அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு, இன்று (30. 01. 2003) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.22, குமாரசாமி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (13358)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்.


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

*காலம்:* 01.02.2003 காலை 10 மணி.

அநேக மாணவரின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து Diploma கற்கை நெறிக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

இயக்குநர்
IIS
யாழ்ப்பாணம். (C/26247)


## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

வருடாந்த

### இல்லமெய்வல்லுநர் போட்டி - 2003

காலம் : இன்று (30.01.2003) வியாழன் பி.ப 1.30 மணி
இடம் : கல்லூரி விளையாட்டு மைதானம்
தலைவர் : திரு.க.சிவாஜி (அதிபர்)



★ பிரதம விருந்தினர்
திருமிகு A.இருதயநாதன்
*(பொறியியலாளர், கட்டடத் திணைக்களம் - யாழ்ப்பாணம்)*

★ சிறப்பு விருந்தினர்
திருமிகு ச.நிமலானந்தா
*(பழைய மாணவர் - லண்டன்)*

★ பரிசில் வழங்குபவர்
திருமிகு றெஜினா இருதயநாதன்
*(கல்விப்பணிப்பாளர் - வலிகாமம் வலயம்)*

★ துறைசார் விருந்தினர்
திரு. வி.பாலசிங்கம்
*(உதவிப் பணிப்பாளர், உடற்கல்வி, வலிகாமம் வலயம்)*

தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம.

*கந்தரோடை, சுன்னாகம்.* (13839)

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்.

## 6ஆவது ஆண்டு சிராத்த தினம்

30-01-2003



ஈழமணித் திருநாட்டின் இந்துமத குருபீடாதிபதியாகத் திகழ்ந்தவரான
சிவாகமஞானி - வித்தியாசாகரம் - சிவபூஜாதுரந்தரர்

### டாக்டர் அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்

**M.I.H. & D.A.M. & M.D.H.** அவர்கள்

*நித்தியமும் நித்யாக்கினி வளர்த்தே ஹோமம்*
*நெஞ்சாரச் சிவபூசை விதிமுறையாய்*
*பக்தியுடன் புரிந்திட்ட வேதியர் கோன்*
*பவ்வியஞ் சேர் ஸ்கந்த ஸாம்பசிவ சிவாச்சார்யார்*
*வித்தகராய் இந்துமத குருவின் பீடம்*
*வழிவாக ஆரோஹணம் செய்திருந்தார்*
*முத்திவழிகாட்டித் தாமும் பயணம் செய்து*
*ஸ்ரீலஸ்ரீ சிவசாயுச்சிய பதவி கொண்டார்.*

உங்கள் பொய்யான உடல் எம்மைவிட்டுப் பிரிந்திட்டாலும் உங்களது ஆத்மா எங்களை விட்டுப் பிரியாது நிற்கும். ஆண்டுகள் ஆறு கடந்தாலும் எமக்கு ஆறுதல சொல்ல உங்களைப் போன்ற ஓர் ஆசான் வேறு யாருமில்லை. உங்களது அன்பு நினைவுகளோடு வாழும் நாங்கள் நீங்கள் சிவசாயுச்சியப் பதவி அடைந்த 6ஆவது *சிராத்த தினமாகிய இன்று (30. 01. 2003) வியாழக்கிழமை* உங்களை நினைந்துருகி கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி உங்கள் பாதக்கமலங்களைப் பணிந்து வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

*குருபீடாதிபதி வாசஸ்தலம்,*
*ஸ்ரீதேவி அருள்ஜோதி நிலையம்,*
*ஸ்ரீதேவி இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில்,*
*98, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (13816)

ஸ்ரீமதி சாம்பசிவ சிவாச்சாரியார்,
ஸ்ரீதேவி குருகுல சபரி பீடம்,
*68-1 1/4, ஜோசப் டயஸ் லேன்,*
*கொழும்பு - 15.*
*T.P.: 529709*

## அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 19 - 01 - 1912



உதிர்வு 03 - 01 - 2003

### அமரர் சீனி சபாபதி

சுன்னாகம் "ரஞ்சிஸ்தானில" வாழ்ந்த எங்கள் குடும்பத் தலைவா 03.01.2003 இல் வவுனியாவில் மறைந்த செய்தி அறிந்து எமக்கு பல வழிகளிலும் உதவியோர்க்கும், இறுதிச்சடங்கில் கலந்தும், அஞ்சல் வழி மூலமும் துயர்பகிர்ந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எம் இறவா நன்றிகள். நாளை (31.01.2003) வெள்ளிக்கிழமை பாவற்குளத்தில் அமரரின் அந்தியேட்டிக்கிரியைகள் இடம்பெற்று, 02.02.2003 ஞாயிறு வீட்டுக்கிருத்தியமும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் தாங்களும் வருகைதந்து எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, வவுனியா, புகையிரத நிலைய வீதியில் உள்ள முத்தையா மண்டபத்தில் நண்பகல் 12.30 மணியளவில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கிறோம்.

*49/85, கோவில் வீதி,*
*குருமண்காடு,*
*வவுனியா.* (c/26269)

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## Good Value Distributors

பெருமையுடன் யாழ். பெருமக்களுக்கு வழங்கும்

உலக பிரசித்தி பெற்ற முதற்தர கைக்கடிகாரம்

TITAN

The New World Watch



*ஒரு டைட்டன் கடிகாரத்தின் பெருமைமிகு*
*உரிமையாளர் ஆகுவதற்கு*
*எங்கள் ஸ்தாபனத்தின்*
*யாழ். குடாநாட்டிற்குரிய*

ஏக விநியோகஸ்தர்

மகாநதி ரெக்ஸ்

**Mahanathy Tex,**
***16, New Market, Jaffna.***
**Tel : 021 222 2552, 077 7725258**

விற்பனையுடன் விற்பனைக்கு பிந்திய சேவைகளுக்கு
நாடுங்கள் 'மகாநதி ரெக்ஸ்'

GOOD VALUE

✹ 2 வருட சர்வதேச உத்தரவாதம்
☆ கோல்ட் பிளேட்டிங் வொரண்டி

நேரடி தொடர்புகளுக்கு:
**Good Value Distributors (Pvt) Ltd.,**
***104/11, Grandpass Road, Colombo - 14.***
**Tel: 074 - 796726, 071 - 296464** (C/26274)

# தென்மராட்சியில் வீடுகளை விட்டு படையினர் வெளியேற வேண்டும்!

## மக்கள் நலச் சேவைகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.30

தென்மராட்சி உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் குடியிருப்புக்களில் அமைக்கப்பட்டிருக்கும் சகல இராணுவ முகாம்களையும் மூடி அங்கிருந்து உடன் வெளியேறி மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர இராணுவம் அனுமதிக்கவேண்டும்.

- தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கம் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

மக்கள் மீள்குடியமர்வு குறித்து அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 180 நாள்களுக்குள் மக்களின் வாழ்விடங்களில் இருந்தும் பொது இடங்களிலிருந்தும் இராணுவம் முற்றாக வெளியேறி அவ்விடங்களில் மக்கள் குடியேறவும், அவர்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிக்கவும் வழிவகுக்க வேண்டிய கடப்பாடு ஸ்ரீலங்கா அரசுக்கும், அதன் இராணுவத்திற்கும் உள்ளது. ஆனால், ஒரு வருடத்துக்கு மேலாகியும் ஸ்ரீலங்கா இராணுவம் உடன்படிக்கையை மதியாது நாளுக்கு நாள் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஏதோ ஒரு வடிவில் அரங்கேற்றிய வண்ணம் உள்ளது.

ஒருபுறம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் புதுப்புது பிரதேசங்களையும் உள்ளடக்கி மக்களைத் தமது சொந்த வீடுகளில் குடியிருக்கவிடாது தடுப்பதுடன், மறுபுறத்தில் அதற்கப்பாலுள்ள பிரதேசங்களையும், அங்குள்ள குடியிருப்புகளையும் ஆக்கிரமித்து மக்களை குடியேறவிடாது தடுத்து வருகின்றது. தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்நிலைமை நாளுககு நாள் வெவ்வேறு வடிவங்களில் இராணுவத்தால் அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

இங்கு ஒரு சில வீடுகளிலிருந்து தாம் வெளியேறுவதுபோலக் காட்டிக்கொள்வதும், பின்னர் வேறு இடங்களில் இன்னும் கூடுதலான வீடுகளையும் நிலங்களையும் உள்ளடக்கி முகாம்களை உருவாக்குவதும் வழககமாகிவிட்டது. தென்மராட்சியின் பெரும் பகுதியை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் விழுங்கி நிற்கும் இராணுவம், அதற்கப்பாலுள்ள பிரதேசங்களிலும் பல இராணுவ முகாம்களை மக்களின் குடியிருப்புக்கள், பொருளாதார நிலங்களில் அமைத்துள்ளது.

அத்துடன் நில்லாது தற்போது அல்லாரையிலும், நுணாவிலிலும் தனது முகாமை விஸ்தரித்து வருகின்றது. அல்லாரையில் மேலும் பல வீடுகளையும், தென்னங்காணிகளையும் கையகப்படுத்தி முகாம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அப்பிரதேச மக்கள் கண்காணிப்புக்குழு, அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலருக்கும் முறையிட்டும் எந்தவித பலனும் இது வரை ஏற்படவில்லை. அதேபோல் நுணாவிலில் இராணுவம் சில வீடுகளிலிருந்து வெளியேறுவதுபோலப் பாசாங்கு செய்து அதற்கு அருகில் பாரிய நிலப்பரப்பில் குடியிருப்புக்கள் பலவற்றை உள்ளடக்கி பெரிய முகாமை அமைத்து வருகிறது. இதனால் சில குடும்பங்கள் வெளியேற்றப்பட்டிருப்பதுடன் பலர் தமது வீடுகளில் குடியேறமுடியாதுள்ளதுடன், அப்பகுதியில் குடியேறியுள்ள மக்களும் பயத்துடனே வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

2000ஆம் ஆண்டில் தமது உடைமைகளையும், பல உயிர்களையும் இழந்து உடுத்த உடுப்புடன் வெளியேறி அகதிகளாக அலைந்த மக்கள் இன்று சமாதானச் சூழ்நிலை ஏற்படும் என்ற நோக்கில் திரும்பி வந்து தமது வாழ்விடங்களில் குடியமர்ந்து கஞ்சிதானும் குடிக்க விரும்பினாலும் ஸ்ரீலங்கா இராணுவம் அதற்கு அனுமதிபபதாக இல்லை. சமாதானத்தை குழப்ப முயற்சிக்கிறது.

தென்மராட்சியில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் குடியிருப்புக்களில் இருக்கும் சகல இராணுவ முகாம்களையும் மூடி அங்கிருந்து உடனடியாக வெளியேறி, எம்மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர இராணுவம் அனுமதிக்கவேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கையை மதியாது, மக்களின் உரிமைக்கு மதிப்பளிக்காது, மக்களின் இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ளவிடாது தொடர்ந்தும் இராணுவம் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

எனவே, இராணுவத்தினர் தாமாகவே இச்செயற்பாடுகளை உடனடியாக நிறுததவேண்டும் அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினர் உடன் நடவடிக்கை மேற்கொண்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் இதேபோன்று புதிய முகாம்கள் அமைப்பதைத் தடுத்து நிறுத்தவேண்டும். தவறும் பட்சத்தில், தென்மராட்சி மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தொடர் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஜ-3)

## புலிகளுக்கு அல்ல, சிரானுக்கே ஜப்பானின் நிதி உதவியாம்!

கொழும்பு,ஜன.30

ஜப்பானிய அரசு புலிகளுக்கு நிதியுதவி வழங்குகிறது என்று ஊடகங்களில் வெளியான செய்திகளை ஜப்பான் தூதரகம் மறுத்துள்ளது.

புலிகளின் கிளிநொச்சி அலுவலகத்திற்கு 35 மில்லியன் ரூபாவை ஜப்பான் அரசு வழங்கவுள்ளதாக ஒரு சில ஊடகங்களில் வெளியிடப்பட்டிருந்த செய்தி தவறானது.

இலங்கை அரசின் வேண்டுகோளுக்கிணங்க உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு தேவைகளுக்கான உபகுழுவின் (சிரான்) கிளிநொச்சி அலுவலகத் தளபாடங்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்களை வாங்குவதற்கு 35.23 மில்லியன் ரூபாவை பயன்படுத்த ஜப்பான் அனுமதியளித்தது. சிரான் அலுவலகத்தை அரசும் புலிகளும் சேர்ந்தே நடத்துகிறார்கள் என்பதை ஜப்பான் தூதரகம் சுட்டிக்காட்டியிருக்கிறது. (ஐ)

## பிரதமரின் ஒஸ்லோ அறிக்கை குறித்து இன்று சபையில் விவாதம்

கொழும்பு;ஜன.30

அரசு ஒஸ்லோவில் விடுதலைப் புலிகளுடன் நடத்திய சமாதானப் பேச்சுகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் விடுத்த அறிக்கை குறித்து இரண்டு நாள் விவாதம் நடைபெறும்.

திங்கட்கிழமையன்று கூடிய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் சபை ஒத்திவைப்புவேளை விவாதமாக அது நடைபெறும்.

முன்னைய தீர்மானத்தின்படி இவ்விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்தது. ஆயினும், அரசியல் விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தற்பொழுது வெளிநாடு சென்றிருப்பதால் அது தடைப்பட்டது. (ஐ)

## சைவசமய அறிவுப்போட்டியும் செயன்முறைப் பரீட்சையும்

யாழ்ப்பாணம்,ஜன.30

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் இந்த ஆண்டுக்கான சைவசமய அறிவுப் பரீட்சையும், செயனமுறைப் போட்டியும் எதிர்வரும பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது.

தரம் ஒன்று முதல் தரம் 13 வரையான மாணவர்கள் பங்கேற்கும் சைவ சமய அறிவுப்பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி, 22ஆம் திகதிகளிலும் வயது வேறுபாடின்றி சகலரும் பங்கேற்கும் செயன்முறைப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இவற்றுக்கான விண்ணப்ப முடிவு திகதி நாளை 31ஆம் திகதியெனவும் மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 'இல. 163, நாவலர் வீதி, வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகத்துடன் தொடர்புகொள்ளுமாறும் பரீட்சைச் செயலாளர் க.கந்தசாமி தெரிவித்துள்ளார். (ஜ-8)

## வடக்கு - கிழக்கில் ஆள் கடத்தலை கண்காணிக்க விசேட பொலீஸ் குழுக்கள்

கொழும்பு,ஜன.30

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகள் ஆள்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்களா? என்பதை நேரில் கண்டறிவதற்காக விசேட பொலீஸ குழுக்கள் சகல தமிழ் மாவட்டங்களுக்கும் விரைவில் அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன.

இப்படிக் கூறியுள்ளார் பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா.

இந்த விவகாரம் குறித்து ஜனாதிபதி விடுத்த உத்தரவுக்கு அமையவே விசேட பொலீஸ் குழுக்கள் அனுப்பப்படவிருக்கின்றன என்றும் - அவர் தெரிவித்தார்.

விசேட பொலீஸ் குழுக்கள் ஆள் கடத்தல்கள் பற்றி நிலைமையை மதிப்பீடு செய்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் ஆள்கடத்தல் குறித்து கடந்த சில மாதங்களாக பல தகவல்கள் தனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருப்பது கவலை அளிக்கின்றது என்றும் -

இது தொடர்பாக உடன் விசாரணை நடத்தி தமக்கு அறிவிக்க வேண்டும் என்றும் -

பொலீஸ்மா அதிபரையும் இராணுவத் தளபதியையும் ஜனாதிபதி கோரியிருந்தார். (ஜ-3)

## மாநகரசபைக்கு கூடுதல் நிதி கேட்டு ஆனந்தசங்கரிக்கு புளொட் கடிதம்

யாழ்.மாநகரசபைப் பிரதேசத்தில் நிலவும் சுகாதாரச் சீர்கேட்டை ஓரளவாவது நிவர்த்தி செய்ய கூடுதல் நிதியை ஒதுக்கவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியிடம் மாநகர சபையின் 'புளொட்' உறுப்பினர் செ.இருதயராஜன் கோரியுள்ளார்.

ஆனந்தசங்கரிக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 2001ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்றுள்ள தங்களது கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர், மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு அரசால் ஒதுக்கப்படும் நிதிகளை மக்களின் அவசர அவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குச் செலவிடாமல் அரசியல் ஆதாயங்களுக்காக செலவு செய்வதையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம்.

தந்தை செல்வா மரியாதை செய்யப்பட வேண்டியவர். இருப்பினும் இன்றுள்ள சூழ்நிலையில் தந்தை செல்வாவின் சதுக்கத்தில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் தூபியைச் சுற்றி மதில் கட்டுவதற்கு பல லட்சம் ரூபா மக்கள்பணம் செலவிடப்பட்டுக்கொண்டிருப்பதை தாங்கள் அறிவீர்களா? கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்ற யுத்தத்தினால் எத்தனை ஆயிரம் மக்கள் வீடிழந்து வானமே கூரையாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக யாழ்.மாநகரசபையின் கரையோரப் பிரதேசங்கள் அனைத்தும் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் உள்ள வடிகால்கள் அனைத்துமே புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டிய நிலையிலுள்ளன. இன்றைய சுகாதாரச் சீர்கேட்டுக்கு இதுவும் ஒரு காரணம். பெரும்பாலான மதகுகள், பாலங்கள், வீதிகள் யாவும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. இப்பகுதிகளில் உள்ள வடிகால்களைத் திருத்துவதற்கு மட்டும் 48 கோடி ரூபா நிதி தேவைப்படுகிறது. இதைவிட வீதிகள், மதகுகள் போன்றவற்றைத் திருத்தியமைக்க 50 கோடி ரூபாக்களுக்குமேல் தேவைப்படுகிறது. உடைந்த வீடுகளின் மதிப்பீட்டுச் செலவுகளையும் சேர்த்தால் எத்தனையோ ஆயிரம் கோடி ரூபாக்கள் தேவையிருக்கும்போது மக்களுடைய பணத்தை இப்படியான வழிகளில் செலவு செய்யாது மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படவேண்டியது அவசியம்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் என்ற ரீதியில் தங்களுடைய கூட்டமைப்பினரின் 2003 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடான 3 கோடி ரூபாககளிலிருந்து குறைந்தது ஒரு கோடி ரூபாககளையாவது யாழ். மாநகரசபைக்கு ஒதுக்கி இப்பகுதிகளில் காணப்படும் சுகாதாரச் சீர்கேட்டை ஓரளவாவது நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும்படி பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சார்பாகவும், மாநகராட்சி மன்றத்தின் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (ஜ-3)





திருநெல்வேலி லயன்ஸ் கழகத்தின் அறக்கொடை வழங்கும் நிகழ்வில் வலயத் தலைவர் டாக்டர் செல்வி நவமலர் கனகரட்ணம் உரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் -

நல்லை ஆதீனத்துக்கான கூரை விசிறிகளை யாழ்.வளர்ப்புப் பெற்றோர் கழகப் பொருளாளர் வி.மகாலிங்கம் ஆதீனமுதல்வரிடம் கையளிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் கயல்விழி, மாவட்ட இணைப்பாளர் எஸ்.எஸ்.தங்கராசா, கழகத் தலைவர் கலாநிதி க.குணராசா மற்றும் பிரமுகர்களும் படத்திற் காணப்படுகின்றனர். (எ)

# ஈராக்மீது போர் வேண்டாம் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்

புதுடில்லி,ஜன.30


ஈராக்மீது அவசரப்பட்டுப் போர் தொடுக்கவேண்டாம் என அமெரிக்காவை இந்திய பிரதமர் வாஜ்பாய் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஈராக்மீது போர் தொடுப்பது பிரச்சினைக்குத் தீர்வாகாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆமதாபாத்வதோதரா அதிவேக நெடுஞ்சாலையை செவ்வாய்க்கிழமை திறந்துவைத்துப் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் தொடர்பான விவரங்களைத் தெரிவிக்க ஈராக் முன்வரவில்லை. ஆயுத சோதனையாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு அழிக்கவில்லை என்று ஐ.நா.ஆயுத சோதனைக் குழுத் தலைவர் ஹான்ஸ் பிளிக்ஸ் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

இதையடுத்து, ஈராக்மீது இராணுவ நடவடிக்கை எடுக்க அமெரிக்கா முற்படலாம் எனத் தெரிகிறது.



வல்லரசான அமெரிக்கா, ஈராக் விடயத்தில் அவசர கோலத்தில் போர் நடவடிக்கையில் இறங்கக்கூடாது. ஐ.நாவுடன் இணைந்து செயற்பட்டு ஈராக் பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வுகாண வேண்டும்.

ஈராக்மீது போர் தொடுத்தால் எண்ணெய் விலைகள் அதிகரித்து அதனால் உலகப் பொருளாதாரம் பாதிக்கப்படும்.

ஈராக் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இந்தியா பெருமளவு பெற்றோலியப் பொருள்களை இறக்குமதி செய்கிறது. ஈராக்மீது போர் தொடுக்கப்பட்டால் பெற்றோலிய இறக்குமதி பாதிக்கும்.

ஈராக்மீது உடனயாகப் போர் தொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று வேறு சில நாடுகளும் கருத்துத் தெரிவித்துள்ளன. எனவே, அமெரிக்கா பொறுத்திருந்து செயற்படுவது பயன்தரும் - என்றார் பிரதமர் வாஜ்பாய். (ம)

## லண்டன் சந்தையில் தங்கம் விலை சரிவு!

லண்டன்,ஜன.30

லண்டன் சந்தையில் தங்கத்தின் விலை செவ்வாய்க்கிழமை சரிந்தது.

திங்கட்கிழமை ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 365.75 டொலராக இருந்தது. செவ்வாய்க்கிழமை அது 365.65 டொலரானது. ஒரு அவுன்ஸ் என்பது சுமார் 31 கிராம்.

அதேசமயம், ஐரோப்பிய டொலருக்கு நிகரான அமெரிக்க டொலரின் செலாவணி மாற்று மதிப்பு அதிகரித்தது.

ஈராக்மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சமே சந்தையில் இவ்வகையில் எதிரொலிக்கிறது. (ம)

# அமெரிக்கத் தாக்குதலை சமாளிக்க சதாம் ஆயத்தம்

பாக்தாத்,ஜன.30

ஈராக்மீது அமெரிக்கா தாக்குதல் தொடுத்தால் அதை எதிர்கொள்ள ஆயத்தம் செய்துவருகிறார் ஈராக் அதிபர் சதாம் ஹுசைன்.

பேரழிவு ஆயுத இருப்பு விவரங்களை முழுமையாகத் தெரிவிக்க ஈராக் முன்வரவில்லை என்று அந்நாட்டில் சோதனை நடத்திய ஐ.நா. ஆயுத சோதனைக் குழுத் தலைவர் ஹான்ஸ் பிளிக்ஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் அவர் கூறிய குற்றச்சாட்டையடுத்து, ஈராக்மீது தாக்குதல் தொடுப்பதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா தீவிரப்படுத்தியுள்ளது.

எனவே, ஈராக் இராணுவ உயர் அதிகாரிகள் அனைவரையும் திங்கட்கிழமை சதாம் ஹுசைன் உடனடியாக அழைத்துப் பேசினார். அமெரிக்காவின் தாக்குதலை முறியடிப்பதற்கான செயற்றிட்டம் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் சதாமின் இளைய மகன் குசேவும் கலந்துகொண்டார்.

போர் மூண்டால், ஈராக்கிலுள்ள தகவல் தொடர்பு சாதனங்கள் செயலிழக்காமல் இருக்க உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று சதாம் வலியுறுத்தினார். (ம)

## போர்தான் தீர்வு என்கிறது அமெரிக்கா

நியூயோர்க்,ஜன.30

ஆயுத சோதனைக்கு முழுமையாக ஒத்துழைக்காத ஈராக்மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதுதான் ஒரே வழி. எனினும், இது குறித்து அதிபர் புஷ்தான் இறுதி முடிவு எடுக்க வேண்டும் என்று ஐநாவுக்கான அமெரிக்க தூதர் ஜோன் நெக் ரோபோன்டி தெரிவித்தார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:-

இரசாயன மற்றும் உயிரியல் ஆயுத இருப்பு விபரங்களை முழுமையாகத் தெரிவிக்க ஈராக் முன்வரவில்லை. அபாயகரமான ஆயுதங்களை அழித்துவிட்டதாக ஈராக் கூறிவருவதை ஏற்க இயலாது. ஆயுத சோதனைக்கு ஈராக் முழு ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்று அந்நாட்டில் சோதனையை மேற்கொண்ட ஐ.நா.ஆயுத சோதனைக் குழுத் தலைவர் ஹான்ஸ் பிளிக்ஸ் அறிக்கையில் கூறியுள்ளார்.

ஆயுத சோதனையாளர்களுக்கு ஈராக் முழு ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்பதை பிளிக்ஸ் அறிக்கை தெளிவுபடுத்துகிறது. இந்நிலையில் ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆனாலும், இது குறித்து அதிபர் புஷ்தான் இறுதி முடிவு எடுக்கவேண்டும் என்றார் ஜோன் நெக்ரோபோன்டி. (ம)



ஈராக் விவகாரம் குறித்து அமெரிக்க காங்கிரஸில் செவ்வாயன்று முக்கிய உரையாற்றிவிட்டு அதிபர் வெளியேறும் காட்சி இது. அந்த உரையில் கடுமை தொனித்தது. இந்த விவகாரத்தில் அமெரிக்கா தனது முழுப் பலத்தையும் பிரயோகிக்கும் என்றார் அவர். ஈராக்குக்கு எதிராகப் படை நடவடிக்கை தேவையாக இருந்தால் சிலமணி நேரத்தில் தாக்குதலைத் தொடங்க அமெரிக்கப் படைகள் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# மீன் நாற்றத்தால் வியாபாரத்தில் இழப்பு நஷ்டஈடு கொடுக்க நீதிமன்று உத்தரவு

டோக்கியோ,ஜன.30

ஜப்பானில் டோக்கியோ நகரில் பெண்களுக்கான ஆடைகளை விற்று வரும் கடையை ஒரு பெண் நடத்தி வந்தார். அதே கட்டடத்தில் மேலும் ஒரு கடையை மீன் உணவகத்துக்குக் கட்டட உரிமையாளர் வாடகைக்குவிட்டார். மீன் உணவகத்தில் எழுந்த மீன் நாற்றத்தால் ஆடையகத்துக்கு வாடிக்கையாளர்கள் வருவது குறைந்துபோய்விட்டது. இதனால் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு உள்ளது என்று கூறி, நஷ்டஈடுகோரி அந்த ஆடையக உரிமையாளர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, ஆடையக உரிமையாளருக்கு கட்டடத்தின் சொந்தக்காரர் சுமார் 6லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கவேண்டும் என்று உத்தரவிட்டார். (ம)

## இஸ்ரேல் தாக்குதலில் 3பாலஸ்தீனர் பலி!

காஸா நகரம்,ஜன.30

காஸா நகரத்தில் ஒரு வீட்டின் மீது இஸ்ரேல் இராணுவ ஹெலி குண்டு வீசியதில் ஹமாஸ் தீவிரவாதிகள் இருவரும் ஒரு இளம் பெண்ணும் இறந்தனர்.

முகமது சலாமாஹாஹின் (30), சபரின் சலாமாஹாஹின் (15), முகமது அல் அடுல் (25) ஆகியோரே இறந்தவர்களாவர்.

இஸ்ரேல் ஹெலி எதற்காக இந்த வீட்டில் குண்டு வீசியது என்று தெரியவில்லை என பாலஸ்தீன பாதுகாப்பு அதிகாரிகள் கூறினர். (ம)



மேற்குக்கரை நகரான நப்லுஸில் இஸ்ரேலியர்கள் நடத்திய தாக்குதலில் குறைந்தது நால்வர் கொல்லப்பட்டனர். அதனை எதிர்த்து பலஸ்தீனர்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்; ரயர்கள் எரிக்கப்பட்டன. அவ்வாறு எரிக்கப்பட்ட ரயர் ஒன்றின் அருகே நின்று பலஸ்தீனச் சிறுவன் ஒருவன் இஸ்ரேலிய இராணுவ ஜீப்பை நோக்கி கல் எறிவதையே இங்கு காண்கிறீர்கள்.

# லண்டனிலுள்ள பாகிஸ்தான் தூதரின் பங்களா விற்பனைக்கு வருகின்றது

லண்டன்,ஜன.30

லண்டனிலுள்ள பாகிஸ்தான் தூதரின் அதிகாரபூர்வ வீட்டை விற்க பாகிஸ்தான் அரசு முடிவுசெய்துள்ளது. அதை ரூ.10கோடிக்கு வாங்க 3 பேர் போட்டாபோட்டி போடுகின்றனர்.

லண்டனில் கோடீஸ்வரர்கள் வசிக்கும் ஹாம்ப்ஸ்டெட் பகுதியில் உள்ள இந்த சொகுசு பங்களாவை வாங்குபவர்களை வலைவீசித் தேடி வருகிறது பிரபல ரியல் எஸ்டேட் நிறுவனமான .'.பாக்ஸ்டன்.

3 மாடிகள் கொண்ட இந்த சொகுசு பங்களாவில் 8 படுக்கை அறைகள் உள்ளன. விசாலமான வரவேற்பறையும் வீட்டைச்சுற்றிலும் கண்ணைக்கவரும் தோட்டமும் உள்ளது.

பாகிஸ்தான் பிரதமராக நவாஸ் ஷெரீப் இருந்தபோது முன்னாள் பாகிஸ்தான் தூதர் மியான் ரியாஸ் சாமியால் இந்த பங்களா வாங்கப்பட்டது. சுவிஸ் காட்டேஜ் பகுதியில் 56 அவினியூ சாலையில் இருந்த வீடு விற்கப்பட்டு இந்த பங்களாவை வாங்க ஏற்பாடு செய்தார் சாமியால்.

இந்த பங்களா மிகவும் சொகுசாக வசிப்பதற்கு ஏற்றதாக இருந்தாலும், இங்கிருந்து வெகுதொலைவில் உள்ள அலுவலகத்துக்குச் சென்று வரமிகவும் கடினமாக உள்ளது. பங்களாவில் இருந்து தூதரக அலுவலகத்துக்குச் செல்ல காலையிலும் மாலையிலும் 3 மணி நேரங்கள் வீணாக்கவேண்டியுள்ளது. இதனால், நேரமும் செலவும் அதிகமாகிறது. சாதாரண பாகிஸ்தான் குடிமகனால் இந்தப் பங்களாவுக்கு எளிதில் வரமுடியாது. கார் வைத்திருந்தால் மட்டும் அது சாத்தியமாகும் என்று தற்போதைய பாக்.தூதர் ஜாபர் கூறினார்.

ஒரு நாட்டின் தூதருக்காக இது போன்ற விலையுயர்ந்த சொகுசுப் பங்களாவை வாங்கியது நியாயமற்றது. இதுபோன்ற செயலால் அரசுக்குப் பெரும் நிதிச்சுமையே ஏற்படும் எனவும் ஜாபர் கூறினார். (ம)

# பிளிக்ஸின் அறிக்கையின் மேலும் சில விவரங்கள்

நியூயோர்க்,ஜன.30

பேரழிவு ஆயுத இருப்பு விவரங்களை முழுமையாகத் தெரிவிக்க ஈராக் முன்வரவில்லை என்று அந்நாட்டில் ஆயுத சோதனை நடத்திய ஐ.நா. ஆய்வுக் குழுத் தலைவர் ஹான்ஸ் பிளிக்ஸ் குற்றம் சாட்டியுள்ளார் என்பது தெரிந்ததே. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள மேலும் சில விவரங்கள் இவை.

"அபாயகரமான ஆயுதங்களை அழித்துவிட்டதாக ஈராக் கூறிவருவதை ஏற்கமுடியாது. நீண்டதூரம் சென்று இலக்குத் தவறாமல் தாக்க வல்ல ஏவுகணைகளை ஈராக் மறைத்து வைத்துள்ளது.

"300இற்கும் மேற்பட்ட ரொக்கெட் எஞ்சின்களையும் 6 ஆயிரத்து 500 வகை இரசாயன ஆயுதங்களையும் ஈராக் வைத்துள்ளது. நோய் பரப்பும் 8 ஆயிரத்து 500 லீற்றர் அந்திரெக்ஸ் கிருமிகளை கடந்த 1991ஆம் ஆண்டே அழித்துவிட்டதாக ஈராக் கூறுவதை நம்ப இயலாது. அந்திரெக்ஸ் கிருமிகளைக் கூடுதலாக அது உற்பத்தி செய்திருக்கலாம்.

"பாக்தாத் நகரைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானியின் வீட்டிலிருந்து 3 ஆயிரம் பக்க அறிக்கை கைப்பற்றப்பட்டது. செறிவூட்டப்பட்ட யுரேனியத்தைத் தயாரிப்பதற்கான விவரம் அதில் இடம் பெற்றிருந்தது. இதுபோன்ற முக்கிய தகவல்களை விஞ்ஞானிகளின் வீட்டில் ஈராக் அரசு மறைத்து வைத்துள்ளமை இதன்மூலம் தெரியவருகிறது. நாசகார ஆயுதங்கள் பற்றிய விவரங்களை தனியார்வசம் ஈராக் அரசு ஒப்படைத்துள்ளது அபாயகரமானது" - என்றார் ஹான்ஸ் பிளிக்ஸ். (ம)

# குளோனிங் முறை மூலம் புதுவகை பசு உருவாக்கம்

பாரிஸ்,ஜன.30

இரண்டு வித புரோட்டின் சத்துள்ள பால் தரக்கூடிய, உயிரணுவில் மாற்றம் செய்யப்பட்ட பசுவை, குளோனிங் முறையில் நியூஸிலாந்து விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

கோயட்ஸ் வெய்டல் என்பவர் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு இத்தகைய பசுக்களை உருவாக்கியுள்ளது. மனிதர்கள் குடிப்பதற்கு ஏற்ற பாலை இந்தப் பசுக்கள்மூலம் பெறமுடியும். பீட்டா, கப்பா என்ற இரண்டுவித புரோட்டீன்கள் பாலில் இருந்தால், அதிலிருந்து எடுக்கப்படும் பாலாடைக் கட்டி, கெட்டியாவதற்கு உதவும். பாலாடைக் கட்டி தயாரிக்கும்போது தண்ணீர் போன்ற திரவம் உருவாகாமல் தடுக்கமுடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இத்தகைய பசுக்களை பண்ணைகளில் அதிக எண்ணிக்கையில் உருவாக்கினால் பொருளாதார ரீதியில் நல்ல பலன் கிடைக்கும்.

ஆடுகளின் உடலில் குறிப்பிட்ட உயிரணுக்களைச் செலுத்தினால், அவை புரோட்டீன் சத்துள்ள பாலைத் தரும். அந்தப் பாலில் இருந்து அரிய மருந்துகளை செய்யலாம்.

தேவையற்ற உயிரணுக்கள் நீக்கப்பட்ட பன்றிகளையும் குளோனிங் முறையில் உருவாக்கலாம். அத்தகைய பன்றிகளின் உடல் உறுப்புகளை, உடல் நலம் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குப் பொருத்தலாம் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (ம)

# சமாதான முயற்சியில் ஈடுபட நேபாளத்தில் நோர்வே விருப்பு

காத்மாண்டு,ஜன.30


நேபாள அரசுக்கும் கமயூனிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே உதவத் தயாராக உள்ளது.

நேபாளத்துக்கான நோர்வேத் தூதர் இன்கிரிட் ஆப்ஸ்டட் இதைத் தெரிவித்துள்ளார். இருதரப்புக்கு இடையே உள்ள பிரச்சினை மிக விரைவில் தீர வாய்ப்புள்ளது. நேபாளம் விரும்பினால் சமரச முயற்சிக்கு உதவ நோர்வே தயார் - என்றார் அவர். (ம)

## சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கில்

# நாடாளுமன்றம் கலைக்கப்படுமென எதிர்க்கட்சிகள் பொய்ப் பிரசாரம்

## அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவிப்பு



கொழும்பு,ஜன.30

தற்சமயம் இடம்பெறும் பேச்சுக்களில் வெற்றி காணும் இலக்குடன் அரசு செயற்படுகின்றது. இதைக் குழப்புவதற்காக, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெறும் என்று எதிர்க்கட்சிகள் பொய்ப் பிரசாரம் செய்கின்றன.

- இவ்வாறு பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும் என்று வெளிவரும் செய்திகள் குறித்துக் கூறுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றம் கண்டு தீர்வு ஒன்றைக்காண அர்ப்பணிப்புடன் அரசு செயற்பட்டு வருகின்றது. இந்த செயற்பாட்டைக் குழப்ப பலவகையில் எதிர்க்கட்சிகள் செயற்படுகின்றன.

இந்தவகையில், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெறும் என்று பிரசாரம் செய்யப்படுகின்றது. நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதிக்கு எந்தவித காரணமும் இல்லை. தேர்தல் நடத்தப்பட்டாலும் நாமே வெற்றிபெறுவோம் - என்றார் அவர்.(ம-3)

# 40 ஹெக்டேயர் நிலப்பரப்பில் உடுவிலில் உ.கிழங்கு செய்கை

## 400 மெ.தொன் அறுவடை கிடைக்கலாம்

உடுவில் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பிரதேசத்தில் இவ்வருடம் மொத்தம் 40 ஹெக்டேயர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேற்படி நிலையத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் பெப்ரவரி மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை அறுவடையின் போது 400 மெற்றிக்தொன் உருளைக்கிழங்கு கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உடுவில் கமநல சேவைகள் நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில் 2002/2003ஆம் ஆண்டு பெரும்போக உருளைக்கிழங்கு செய்கையை மேற்கொண்டுள்ள விவசாய சம்மேளனங்களில் இருந்து உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டுள்ள விஸ்தீரணம், பயிரிடப்பட்ட திகதி, பெப்ரவரிமுதல் ஏப்ரல் வரையான காலத்தில் அறுவடை செய்யக்கூடிய மொத்த விஸ்தீரணம், அந்தந்த மாதத்தில் எதிர்பார்க்கப்படும் மொத்த உற்பத்தி போன்ற விவரங்கள் பெரும்பாக உத்தியோகத்தரால திரட்டப்பட்டுள்ளன.

இம்முறை புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், ஈவினை, இணுவில், உடுவில் தெற்கு ஆகிய பிரதேசங்களில் உருளைக்கிழங்கு செய்கை மேற்கொளளப்பட்டுள்ளது.

அதேசமயம், நீர்வேலி பிரதேசத்தில் ஏராளமான நிலங்களில் செய்கை பண்ணப்பட்டுள்ள உருளைக்கிழங்கினை திடீரென பூஞ்சணத்தால் ஏற்படும் இலைக் கருகல் நோய் தாக்கிவருவதால் உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் கவலையடைந்துள்ளனர். (ம-152)

### புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடப்பட்டது

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல்லை அதிபர் எஸ். பத்மநாதன் கடந்த வியாழக்கிழமை நட்டுவைத்தார். மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.பு.வேலாயுதப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 'நிக்கொட்' திட்டப்பணிப்பாளர் லங்காநேசன், பிரதிப் பணிப்பாளர் புவனேந்திரன், யாழ்.மாவட்ட பிரதிப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-36)

### 450 வீடமைக்கத் திட்டம்

செம்பியன்பற்று,ஜன.30

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள மீளக்குடியமர்ந்த மக்களுக்கு ஜி.ரி.இசற் நிறுவனம் 250 வீடுகளையும், நிகொட் நிறுவனம் 200 வீடுகளையும் கட்டிக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளன.

2003ஆம் ஆண்டு வேலைத் திட்டத்தில் 450 வீடுகளும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. ஆகவே வீடுகள் இவ்வருட முடிவுக்குள் கட்டிமுடிக்கப்படும். (-36)

# தலைமைத்துவமும் இல்லை சரியான தலையும் இல்லை

## ஜே.வி.பியினர் பற்றி சபையில் அமைச்சர் அஸ்வர் கருத்து

ஜே.வி.பியினருக்கு தலைமைத்துவமும் இல்லை, சரியான தலையும் இல்லை. இவர்களுக்கு யதார்த்தம் புரியாது, உண்மை நிலையும் அறவே தெரியாது. இவர்களுடன் சேர்ந்து ஐ.தே.க.ஆட்சியை வீழ்த்த ஜனாதிபதி முயற்சிப்பதுதான் வேடிக்கையாக இருக்கின்றது - இப்படிச் சாடினார் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர்.

நாடாளுமன்றத்தில் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு தொடர்பான திருத்தச் சட்டம்" விவாதத்திற்கு முன்வைக்கப்பட்டது.

இத்திருத்தச் சட்டம் தொடர்பாக ஜே.வி.பியினரும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினரும் விவாதம் நடத்தினர்; விமர்சனம் செய்தனர்.

ஆனால், நிதி நிர்வாகத்துறையில் நீண்ட அனுபவம் கொண்டவரான முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் இத்திருத்தச் சட்டத்தை ஆதரித்துப் பேசினார். இந்தத் திருத்தம் முன்னைய அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்று. இது என்னுடைய குழந்தை. ஆனால், அதில் திருத்தம் செய்யப்படவேண்டிய அவசியமும் உண்டு என சில பகுதிகளையும் சுட்டிக்காட்ட அவர் தவறவில்லை.

பிணையங்கள் பரிவர்த்தனை திருத்தங்கள் சட்டம் முதலீட்டாளர்களது முதலீடுகளுக்கு பங்குச் சந்தையை ஊக்குவிப்பது, பாவனையாளர்களைப் பாதுகாப்பது என்பன தொடர்பாக திருத்தமான ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்காகவே கொண்டுவரப்பட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது இவ்விடயம் தொடர்பாக ஆக்கபூர்வமான ஆலோசனை எதையும் முன்வைக்கவில்லை.

ஜே.வி.பியினருக்கு புலிகளைப் பற்றிப் பேசாவிட்டால் தூக்கமும் வராது. அதனால் புலிகளையும் சபைக்குக் கொண்டுவந்துவிட்டனர்.

ஜே.வி.பி.உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தி பேசும்போது:-

அரிசி, மா, மண்ணெண்ணெய் முதலான அத்தியாவசிப் பொருள்களின் விலை உயர்வுபற்றிக் குறிப்பிட்டார்.




விலை உயர்வுகளைக் குறைக்க முயற்சி எடுக்காமல் சிறிதும் பொருத்தமற்ற இந்தச் சட்டத் திருத்தத்தை அரசு கொண்டுவருகிறது. இதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளும் சர்வதேச பங்குச் சந்தையில் தலையைப் புகுத்தி விடுவார்கள் - என்றார்.

ஜே.வி.பியினருக்கு அவர்களுடைய பாணியிலேயே பதிலடி கொடுத்தார் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர்.

ஜே.வி.பியினர் எந்த உலகத்தில் இருக்கின்றார்கள் என்று அவர்களுக்கே தெரியாது. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகின்றனர்.

இவர்களுடைய தலைவர்தான் லண்டனில் ஒளிந்துகொண்டார் என்றால் இவர்களுடைய தலைகளும் காலியாகிவிட்டன. அங்கே ஒன்றும் இல்லை என்பதால்தான் எதை எதையோ உளறுகின்றார்கள்.

பாணைப் பற்றிப் பேசினர். இப்போது பாண் இருக்கின்றது. ஆனால், அம்மாவின் ஆட்சியில் பாணுக்கான கார்ட் மட்டும்தான் இருந்தது. "போலின்" இல் நின்று வாங்கிவரும் பாணைக்கூடப் பசிதாங்காமல் பலர் தட்டிப் பறித்துச் சென்றதை நீங்கள் மறக்கக் கூடாது - என்றார்.

உங்களுடைய கூட்டு ஆட்சியில் என்ன செய்தீர்கள்? வடக்கு வாழ் தமிழ் மக்களுக்குப் பொருளாதாரத் தடை விதித்தீர்கள். உணவு, மருந்து வகைகளைக்கூட அனுப்பவில்லை. விளக்கெரிக்க எண்ணெய்கூட இல்லை. இருட்டில் இருந்து படித்த யாழ்ப்பாண மாணவர்கள்தான் புலமைப் பரிசில்முதல் பல்கலைக்கழகம்வரை முதல் தரத்தில் சித்தியடைந்தனர். அவர்களைப் பாராட்டுகின்றேன்.

ஜே.வி.பியினர் ஏன் புலிகளைக் கண்டு இப்படிப் பயப்படுகின்றார்களோ தெரியவில்லை.

முன்பு துப்பாக்கிகளைக் காட்டி அச்சுறுத்திய தம்பிமார் இன்று வழிதடுமாறிய எமக்கு வழிகாட்டிகளாகத் துணைக்கு வருகின்றார்கள். இந்த சமாதான நிலையை ஜே.வி.பியினர் விரும்பவில்லை.

முன்னைய ஆட்சியில் "ஒரே மொழி, இரண்டு நாடு" என்று ஆக்கிவிட்டீர்கள். ஆனால், நாம் "இரண்டு மொழிகளில் ஒரே நாடு" என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளோம்.

ஐந்து வருடங்களுக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்கமாட்டேன் என எழுத்துமூலம் உறுதியளித்துள்ள ஜனாதிபதி, இப்போது ஜே.வி.பியுடன் சேர்ந்து அரசாங்கத்தை வீழ்த்த முயற்சிக்கின்றார். ஆனால், நாட்டு மக்கள் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளனர். இச்சதித்திட்டத்திற்கு இடமளிக்க மாட்டார்கள் என அமைச்சர் அஸ்வர் ஜே.வி.பியினருக்குப் பதிலடி கொடுத்தார்.

விவாதத்திற்குப பதில் அளித்தார் பிரதி நிதி அமைச்சரும் கிராமிய தொழில்துறை அபிவிருத்தி அமைச்சருமான பந்துல குணவர்த்தன.

பாண் விலை கூடிவிட்டது. வங்கியாளர்கள் ஓடிவிட்டனர் என எதிர்க்கட்சியினர் கூச்சல் போடுகின்றனர்.

பிறிமா கம்பனியினருக்கு சகல அதிகாரங்களையும் வழங்கியது யார்? ஏனைய வர்த்தக வங்கிகளைப் போன்று மத்திய வங்கியினால் கட்டுப்படுத்த முடியாத சுதந்திரத்தைப் பிரமுக வங்கிக்கு வழங்கியது யார்?

நிதி அமைச்சர் என்ற வகையில் இந்த நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டவரும் அந்த ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டவரும் ஜனாதிபதி தான்.

இதனால் பிறிமா கம்பனியினர் தாம் நினைத்தபடி மாவின் விலையைக் கூட்டுகின்றனர். பிரமுக வங்கியினர் ஓட்டம் பிடித்துவிட்டனர். இதற்குப் பொறுப்பேற்பது யார்? என்று கேள்வி எழுப்பினர் அமைச்சர் பந்துல குணவர்த்தன.

இறுதியாக பிணையங்கள் பரிவர்த்தனைகள் ஆணைக்குழு திருத்தச் சட்டம் சபையின் எல்லா நிலைகளிலும் ஏகமனதாக எவ்விதமான திருத்தங்களும் இன்றி நிறைவேற்றப்பட்டது. (ம)

# தொழில் அமைச்சருக்கு சபையில் பெரும் பாராட்டு

கொழும்பு,ஜன.30

சர்வதேச அரங்கில் முதலாவது தலைமைத்துவப் பதவியைப் பெற்ற ஆசியன் என்ற பெருமையை அடைந்துள்ளார் தொழில், தொழில் வாய்ப்புக்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க. இது எமது நாட்டுக்குக் கிடைத்த ஒரு கௌரவம் என பாராட்டிய நீதி சட்ட மறுசீரமைப்பு, பௌத்த சாசன அமைச்சர் டபிள்யு.ஜே.எம்.லொக்கு பண்டார.

நாடாளுமன்றம் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் கூடியபோது, தொழில், தொழில் வாய்ப்புக்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதை சபையில் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்தே நீதி அமைச்சர் லொக்கு பண்டார அமைச்சருக்குத் தனது பாராட்டைத் தெரிவித்துப் பேசினார்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக ஒரு காலத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால், இன்று அப்படியான நிலை இல்லை. அனைத்து மக்களும் மதிக்கப்படும் ஒருநிலை இங்கு ஏற்பட்டுள்ளது. இதனைச் சர்வதேச அரங்கும் அங்கீகரித்து விட்டது - என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த சமரசிங்க உட்பட பல சிரேஷ்ட தலைவர்கள் சபையில் இருந்தபோதும் எதிர்க்கட்சிகளின் சார்பில் எவரும் எதுவும் கூறவில்லை.

இறுதியில் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவும் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டார்.(ம)

# சூடான் குழுவினர் நேற்று நாடாளுமன்றம் வருகை

கொழும்பு,ஜன.30

சூடான் நாடாளுமன்றக் குழுவினர் நேற்றுக்காலை நாடாளுமன்றம் வருகைதந்தனர். சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா இவர்களை வரவேற்றார்.

பின்னர் நாடாளுமன்ற சபாநாயகர் கலரியில் அமர்ந்து சபை நடவடிக்கைகளை அவதானித்தனர்.

சூடான் நாடாளுமன்ற சபாநாயகர் அஹமட் இப்ராஹிம் தாகிர், தேசிய சபை உறுப்பினர் டிகானி முஸ்தபா, இந்தியாவுக்கும் இலங்கைக்குமான சூடான் தூதுவர் உள்ளடங்கிய தூதுக் குழுவினரே நாடாளுமன்றத்திற்கு வருகைதந்து அரை மணிநேரம் வரை சபையின் சபாநாயகர் கலரியில் இருந்தனர். (ம)

### மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனைக்கு புதிய கட்டடம்

மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனைக்கு புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்காக 7கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது பிரதேச செயலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. புதிய கட்டடம் அநேகமாக இவ்வருட இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டுவிடும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-36)

### வெள்ளிவிழா

கொழும்புத்துறை,ஜன.30

உடுவிலில் திருக்குடும்ப கன்னியர் சபையின் அனுசரணையுடன் இயங்கி வரும் உடல், உள வளர்ச்சி குன்றிய சிறார்களைப் பராமிக்கும் 'ஆர்க்' நிலையம் எதிர்வரும் முதலாம் திகதி தனது வெள்ளி விழாவினை கொண்டாடவுள்ளது.

மதவேறுபாடின்றி உளரீதியான தாக்கத்திற்குள்ளான பெருமளவு சிறுவர்கள் இந்நிலையத்தில் தங்கவைத்து பராமரிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (ம-30)

### பதவியுயர்வுகள்

வலிகாமம் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகச் செயற்பட்டுவந்த திருமதி றெஜினா இருதயநாதன் வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுள்ளார்.

அதேசமயம், வலிகாமம் கல்வி வலயத்தில் கல்வி முகாமைத்துவ உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிவந்த சுப்பிரமணியம் சுந்தரசிவம் மேற்படி கல்வி வலயத்தில் கல்வி நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

உடுவில் கல்விக் கோட்டத்தில் வெற்றிடமாகியுள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் நியமனஞ் செய்யப்படும்வரை உடுவில் கோட்டப் பணிப்பாளராகவும் அவர் கடமையாற்றுவார். இவர்கள் இம்மாதம் 24ஆம் திகதி தொடக்கம் தமது பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

(ம-152)

### விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள்!

வலிகாமம் தெற்கு,ஜன.30

சீபா திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் உடுவில் கமநல சேவைகள் நிலையத்தினால் வழங்கப்படவுள்ளன.

'வில்லியம்ஸ்' வகையைச் சேர்ந்த இயந்திரங்களே வழங்கப்படவுள்ளன. இந்த இயந்திரங்களை பெறவிரும்பும் விவசாயிகள் தமது பெயர் விவரங்களை கமநல சேவைகள் நிலையத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு பெரும்பாக உத்தியோகத்தர் வி.இளங்குமார் அறிவித்துள்ளார். (ம-152)

வடக்கு - கிழக்கு

# விவசாய அபிவிருத்திக்கு வாகனங்கள் கையளிப்பு

கிளிநொச்சி,ஜன.30

மட்டக்களப்பு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களின் விவசாய அபிவிருத்திக்கு ஒரு கோடி 17 லட்சம் ரூபா பெறுமதியான வாகனங்களை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியிருக்கின்றது.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற வைபவம் ஒன்றில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை வதிவிடப்பிரதிநிதி ஜே.ஆர்.வேரானி 'நிகொட்' அமைப்புப் பிரதிநிதிகளிடம் வாகனங்களைக் கையளித்தார்.

நான்கு சில்லு உழவு இயந்திரங்கள் - 5, இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் - 7, சூடடிக்கும் இயந்திரங்கள் - 7, நீர் இறைக்கும் இயந்திரங்கள் - 15, தெளிகருவிகள் - 31, லொறிகள் - 2 ஆகியன கையளிக்கப்பட்டவையாகும்.

நேற்று இடம்பெற்ற கையளிப்பு நிகழ்வில் மாகாண சபையின் பிரதம செயலர் கேரங்கராஜன் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(ம-3)


## புனித ஹென்றியரசர் கல்லூரி

**பழைய மாணவர் சங்கம், இளவாலை**

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அவர்களின் சேவை நலன் பாராட்டும் பிரியாவிடையும் எதிர்வரும் (01.02.2003) சனிக்கிழமை காலை 8.15 மணிக்கு நடைபெறவுள்ளது. அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C/26278) -செயலாளர்.



## மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்

கடந்த 28 வருடங்களாக அளப்பரிய வங்கிச் சேவையாற்றி ஓய்வுபெறும்

**திரு.கிருஷ்ணபிள்ளை இராமநாதன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

03.12.1975இல் வங்கியில் சேர்ந்த இவர் ஊர்காவற்றுறை, மானிப்பாய், காங்கேசன்துறை, இரண்டாம் கிளை, சுன்னாகம் கிளைகளில் கடமையாற்றி, காசாளர் தரம் II என்ற பதவியிலிருந்து 03.12.2002 இலிருந்து ஓய்வுபெற்றார்.

ஈச்சமோட்டை, யாழ்ப்பாணத்தில் 03.12.1944இல் பிறந்த இவர், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தினதும், சென்.ஜோன்ஸ் கல்லூரியினதும் பழைய மாணவராவார்.

இவரது அளப்பரிய சேவையினைப் பாராட்டி இலங்கை வங்கி, சுன்னாகக் கிளை முகாமையாளரும், ஊழியர்களும் மகிழ்ச்சியுடன் அவரைக் கௌரவித்து வாழ்த்துவதோடு, அவர் தொடர்ந்தும் தேக ஆரோக்கியத்துடனும் சுறுசுறுப்புடனும் வாழவேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்
இலங்கை வங்கி, சுன்னாகம்.

(13855)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் உயர்திரு.

**தில்லையம்பலம் நாகலிங்கம்**

*(அரசகட்டட ஒப்பந்தகாரரும் லிங்கா பில்லேடர்ஸ் எஞ்சினியரிங் சேர்விஸ் உரிமையாளரும்)*

02.01.2003 அன்று மானிப்பாயில் சிவபதம் எய்திய எங்கள் அன்புத்தெய்வத்தின அந்தியேட்டிக்கிரியை, ஆத்மசாந்திப்பிரார்த்தனை ஆகியன 01.02.2003 (சனிக்கிழமை) எமது இல்லத்திலும் அதனைத் தொடர்ந்து ஆனந்தன் வைரவர் ஆலயத்தில் அன்னதான நிகழ்வும் நடைபெறவுள்ளதால், அன்றைய தினம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*மானிப்பாய் வடகிழக்கு,*
*மானிப்பாய்.* (13876) -மனைவி, பிள்ளைகள்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 15 - 04 - 1926



மறைவு 31 - 12 - 2002

நந்தாவில் கொக்குவிலைச் சேர்ந்த

**திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி**

(செல்லாச்சி)

*தாயும் நீயே; தந்தையும் நீயே!*
*தளராது நின்று எமை*
*தாணியில் வாழவைத்தாயே!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கொக்குவில் மாக்குளைக் கந்தனையும், மனோன்மணி அம்பாளையும் வேண்டி நிற்கின்றோம்.

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.* (13873)

உங்கள் நினைவுடன் வாழும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


## கலந்துரையாடல்

மண்டைதீவு,ஜன.30

ஸ்ரீலங்கா நிப்பொன் கல்வி கலாசார நிலையம் வழங்கும் புலமைப் பரிசுத் திட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மேற்படி திட்டத்தில் இணைக்கப்பட்ட மாணவர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-88)

## விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம்.ஜன.30

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல ,மெய்வன்மை போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணக் கட்டடத்திணைக்களப் பொறியியலாளர் எ.இருதயநாதனும், சிறப்பு விருந்தினர்களாக பழையமாணவர் சந்திலவந்தா, வலிகாமம் உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.பாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

வலிகாமம் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்குவார்.

(எ-5)

## மட்டுவிலில் விசர்நாய்களின் தொல்லை அதிகரிப்பு

தென்மராட்சி,ஜன.30

மட்டுவில் பகுதியில் விசர்நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

கட்டாக்காலியாக அலையும் இந்த நாய்கள் வளர்ப்பு நாய்களுக்கும் வீதியால் செல்லும் பொதுமக்களுக்கும் கடிப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கட்டாக்காலி நாய்களையும், விசர் நாய்களையும் கட்டுப்படுத்துமாறு இப்பகுதி மக்கள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியையும், சாவகச்சேரி பிரதேச சபையினரையும் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த நாய்களால் கடியுண்ட பொதுமக்கள் சாவகச்சேரி, மந்திகை, யாழ்ப்பாணம் ஆகிய ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-117)

## பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம்.ஜன.30

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்பிராந்திய நிலையத்தினால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் பிரதிவாரந்தோறும் புதன், வெள்ளிக்கிழமைகளில் பண்ணிசை வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தேவார இசைமணிகள் ஆர்.திருஞானசம்பந்தன் இவ்வகுப்புகளில் பண்ணிசையை பயிற்றுவித்து வருகிறார்.

இவ்வகுப்புகளில் கலந்துகொண்டு பயன்பெற விரும்புவோர் உடனடியாக இணைந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-173)


## தவறிவிட்டது

நேற்று (29.01.2003) புதனன்று மதியம் ஐம்பதாயிரம் ரூபா பணம் சத்திரத்துச்சந்தியடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

**ஸ்ரீராம் பிளாஸ்டிக் சென்ரர்,**
133/3, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 077-707278

(13872)



## முக்கிய அறிவித்தல்

கல்வியாண்டு 2002/2003 இல் பயிற்சியை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் (8.02.03) சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இம்மாணவர்களிற்கான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் (2.2.03) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணிக்கு IIS தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளதால், அனைத்து மாணவர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்படி விடயம் தொடர்பான கலந்துரையாடலில் முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான கணனிப் பயிற்சி நெறியில் எமது நிறுவனத்தில் பயிற்சியை முடித்துக்கொண்ட அரச உத்தியோகத்தர்களும் தயவுசெய்து தவறாது சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

-இயக்குநர். IIS, யாழ்ப்பாணம்

(C/22821)


## சாயி சிந்தனை

**ஆன்மீகக் கல்வி**



அனைவரையும் நேசியுங்கள், யாரையும் வெறுக்காதீர்கள், நமது பண்டைக் கலாசாரத்தின் உபதேசம் இதுவே. வியாசமுனிவர் 18 புராணங்களின் சாரம், 'Help ever, Hurt never' - 'எப்போதும் உதவி செய். ஒருபொழுதும் துன்புறுத்தாதே' எனக்கூறினார். இதனை அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடித்தால் போதும். உலகியல் கல்வியுடன் ஆன்மீகக் கல்வியும் அவசியமானது. 'ஆத்யாத்ம வித்தியா வித்யானாம்' அன்மீக் கல்வியே உண்மையான கல்வி என்று கூறப்படுகிறது. சத்வம் ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களையும் கடந்து இருமைகளையும் கடந்த பிரம்மனைப்பற்றிய அறிவை அதுமட்டுமே தருகின்றது. இறைவன் மட்டுமே நிரந்தரமானவர், என்றுமுள்ளவர். மற்றவை அனைத்தும் தற்காலிகமானவை; நிலையற்றவை. இக்காலத்திய மக்கள் உலகத்திடம் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இறைவனிடம் நம்பிக்கை கொள்ளவில்லை. உனது இளைமையைக் கொண்டே, உடலழகைக் கொண்டே கர்வங்கொள்ளதே. மின்னலுக்குப் பின் கும்மிருட்டுத் தொடர்வதுபோல இளமைப் பருவத்துக்குப் பின் முதுமைப் பருவம் தொடர்கிறது. காலையில் மலரும் பூ, மாலையில் வாடிக் கீழே விழுகிறது. இதுதான் மனித உடலின் இயல்பு. உடலையும் மனதையும் உன் ஆதிக்கத்தில் வைத்திரு. மற்றவரைச் சார்ந்திராதே! பிறர் உணவு உண்டால் உன் பசி தீருமா? தீராது! ஆன்மீகப் பாதையில் முன்னேற சொந்த முயற்சி மிகவும் அவசியம்.

*(ஆதாரம்: சனாதனசாரதி - ஏப்ரல் 2002)*

# மாநகரசபை நிர்வாகத்தை ஆணையாளரிடம் கொடாதீர்!

## மேயர் கந்தையன் பிரதமருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்மாநகரசபையின் நிர்வாகத்தை எவ்வித காரணம்கொண்டும் விசேட ஆணையாளரிடம் கையளிக்கக்கூடாது.

ஜனாதிபதிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மாநகர சபை முதல்வரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாநகரசபையின் ஆயுள்காலம் எதிர்வரும் 11ஆம் திகதியுடன் பூர்த்தியடையவுள்ளது. இந்த நிலையில் உடனடியாக உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடைபெறாது விட்டால் சபையின் ஆயுள்காலத்தை நீடிப்பது பற்றிப் பரிசீலனை செய்யுங்கள். அதைவிடுத்து எக்காரணம் கொண்டும் சபையை விசேட ஆணையாளரிடம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டாம். சபையின் கௌரவமானது ஜனநாயக முறையான தேர்தலின்மூலமே பேணப்படவேண்டும் - என்றுள்ளது.

(ம-10-5)

# குடாநாட்டில் மழைவீழ்ச்சி கடந்த ஆண்டு குறைவு

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.மாவட்டத்தின் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சியைப் பார்க்கிலும் கடந்த ஆண்டில் 113 மில்லிமீற்றர் மழை அதிகமாகப் பெய்துள்ளது. எனினும் 2001ஆம் ஆண்டைவிட அது குறைவான மழைவீழ்ச்சியே என்று திருநெல்வேலியிலுள்ள வானிலை அவதான நிலையத்தின் பதிவுகள் தெரிவிக்கின்றன.

மாவட்டத்தின் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி ஆயிரத்து 230 மில்லிமீற்றர் உள்ளபோதும் கடந்த ஆண்டில் ஆயிரத்து 413.5 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது.

இது 2001ஆம் ஆண்டைப் பார்க்கிலும் 532 மில்லிமீற்றர் குறைவாகும்.

இதேவேளை -

இம்மாதம் 8ஆம் திகதி 20.2 மில்லிமீற்றர் மழைபெய்துள்ளது. எனினும் பெப்ரவரி மாதத்திலும் மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக நிலையத்தின் பொறுப்பதிகாரி வே.புஷ்பநாதன் தெரிவித்துள்ளார்.

(ம-10)


## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் வன்னியநாதன்

(ஆயுர்வேத வைத்தியர்)

சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான வைத்திலிங்கம் வன்னியநாதன் நேற்று (29.01.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இலக்குமியின் கணவரும், வைத்திலிங்கம் - குலநாயகி தம்பதிகளின் இளைய மகனும், குலமணி, தேவசுந்தரத்தின் சகோதரரும், குமாரசாமி, கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2003) வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி தெற்கு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கந்தசாமி கோயிலடி,*
*நீர்வேலி தெற்கு.* (13870)

தகவல்:
மனைவி.

### அப்புக்குட்டி தங்கராசா

*(கட்டட ஒப்பந்தகாரர்)*

மயிலணி வடக்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி தங்கராசா அவர்கள் 28.01.2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும், யோகராஜாவின் (காங்கேசன் லங்கா சிமெந்து ஆலை) அன்புச் சகோதரரும், சுஜி, சுபா, ஜெசீபன் (டுபாய்), கௌசிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரங்கநாதனின் மாமனாரும் நம்மியாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2003) வியாழக்கிழமை பி.ப.1மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மயிலணி வடக்கு.*
*சுன்னாகம்.* (13868)

தகவல்:
குடும்பத்தினர்.




கடந்த வருடத்தின் போது எம்மில்
மிகத்திறமையாக செயலாற்றியவர்களுக்கு
சன்மானம் வழங்கும் பொருட்டு
நாடெங்கிலுமுள்ள ஜனசக்தி இன்சூரன்ஸ்
கம்பனி லிமிட்டெட்டின் அலுவலகங்கள்
2003 பெப்ரவரி 1ம் திகதி
மூடப்பட்டிருக்கும். முக்கியமான ஒரு
காரணத்தை முன்னிட்டே நாம் அவ்வாறு
மூடுகின்றோம் அதாவது
உங்களுக்காகவே-ஏனெனில் எமது
தொழில் உங்களிலேயே தங்கியுள்ளது
ஆதலால் உங்களுக்கு மேலும்
அக்கறையோடு, இன்னும் சிறப்பாக
சேவை புரிவதற்கு பெப்ரவரி 3ம் திகதி
திங்கட்கிழமை எமது அலுவலகங்கள்
மீண்டும் திறக்கப்படும்.

JANASHAKTHI INSURANCE

Certified Insurer

Q & F Advertising

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 444 |
|---|---|
| திகதி | 28.01.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல.
4718837-4733744

வெற்றி இலக்கங்கள் **19 26 34 46**



லக்கினம்

மேடம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 3,783,700/- வெல்லப்பட்டது

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 333,226 | 10 | 3,332,260 |
| 2 இலக்கங்கள் | 30,533 | 20 | 610,660 |
| 1 இல + லக்கினம் | 30,231 | 30 | 906,930 |
| 2 இல + லக்கினம் | 2,855 | 100 | 285,500 |
| 3 இலக்கங்கள் | 816 | 500 | 408,000 |
| 3 இல + லக்கினம் | 79 | 5,000 | 395,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 3,783,700 | 3,783,700 |
| மொத்தம் | 397,744 | - | 10,022,050 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 10,022,050/-

தொடர் இல 5709685க்கு மேற்பட்ட நீலம் நிற டிக்கட்டுகள் 2003 ஜனவரி 31ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும் வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 11, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில்
பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில்
முச்சக்கர வண்டி வெற்றி பெறும்
5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4722382-6-44
4726825-6-06
4725521-3-18
4726140-5-92
4723114-5-84

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கரவெட்டி பிரதேச செயலகத்தை
சேர்ந்த கிராம உத்தியோகத்தர்
**திரு.சின்னத்துரை குணராசா**
(J/377)
அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் Iஇற்குப் பதவியுயர்வு பெற்றுக்கொண்டதையிட்டு அவரைப் பாராட்டி எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, அவர் மேலும் பல பதவிகளையும் சிறப்புக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

*றோயல் ஸ்ரார் மெடிக்கல் சென்ரர்,*
*வதிரி, கரவெட்டி.* (13862)

Dr.N.பத்மநாதன்
குடும்பத்தினர்.

# 80ஆவது அகவையில் வாழ்த்துகின்றோம்



எங்கள் குடும்ப முதல்வர்
உயர்திரு.
**சி.மார்க்கண்டு**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
அவர்களின் 80ஆவது அகவை "முத்து விழா" நாளாகிய நிகழ்வில் இன்று (30.01.2003) வியாழக்கிழமை அவர் மேலும் பல்லாண்டுகள் எம்முடன் நலமே வாழ்கவென அவரை அன்புடன் வாழ்த்துகின்றோம்.

*15/3, புது வீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (13863)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 23.04.2003 for the under mentioned posts.

### FACULTY OF MEDICINE

1. **Professor** in Anatomy/Community Medicine/ Pathology/Forensic Medicine/Medicine/Pharmacology/Paediatrics/Obstetrics and Gynaecology/ Surgery.
2. **Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/Lecturer (Probationary)** in Anatomy/Biochemistry/Physiology/Community Medicine/Pathology/Microbiology/Parasitology/ Forensic Medicine/Pharmacology/Psychiatry/ Paediatrics/Obstetrics and Gynaecology/Surgery/ Medical Education.
3. **Clinical Psychologist**

| Post | Salary Scale |
|---|---|
| Professor | Rs.25,500-8X550-29,900/=p.m. |
| Senior Lecturer Grade I | Rs.21,500-8X475-25,300/=p.m. |
| Senior Lecturer Grade II | Rs.18,325-5X475-20,700/=p.m. |
| Lecturer (Probationary) | Rs.11,820-10X375-15,570/=p.m. |
| Clinical Psychologist | Rs.11,820-10X375-15,570/=p.m. |

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by sending a money order for Rs.20/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna" together with a self-addressed stamped envelop 23X30 cm in size.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR,**
*UNIVERSITY OF JAFFNA,*
*SRI LANKA.*

*28.01.2003* (S/26277)

# உலகக்கிண்ண சூதாட்டம் சூடுபிடிக்கிறது; ஆஸ்திரேலியா வெல்லுமெனக் கணிப்பு

உலகக்கிண்ணக் கிரிக்கெட்போட்டிகளையொட்டி கிரிக்கெட் சூதாட்டம் சூடுபிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆஸ்திரேலியா வெற்றி பெறும் எனக் கணித்து பலர் பணம் கட்டுகின்றனர்.



உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு இன்னும் 9 நாள்களே இருப்பதால் கிரிக்கெட் ஆர்வலர்கள் எந்த அணிக்கு வெற்றி வாய்ப்பு என்று இப்போதே விவாதத்தைத் தொடங்கி விட்டனர்.

இது ஒரு புறமிருக்க, இப்போட்டியை வைத்து சூதாட்டம் நடத்தி சம்பாதிக்கும் நிழல் உலகத்தினர் தங்களது வேலையையும் விரைவாகத் தொடங்கி விட்டனர். இதுபோன்ற சூதாட்டத்தில் முன்னணியில் உள்ள நகரங்களில் மும்பையும் ஒன்றாகும்.

உலகக் கிண்ணப் போட்டிகளில் 14 அணிகள் பங்கேற்ற போதிலும் ஆஸ்திரேலிய அணிக்குத்தான் அதிக மவுசு. இந்த அணிதான் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் என்று கணித்து பலர் பணம் கட்டி வருகின்றனர்.

இதனால், அந்த அணி மீது பணம் கட்டினால் குறைவான தொகையே கிடைக்கும். ஆஸ்திரேலியா அணி வெற்றி பெறும் என்று 4 ரூபாய் கட்டி அதுபோல நடந்து விட்டால் நீங்கள் கட்டிய பணத்தையும் சேர்த்து ரூபா 8 தருகிறோம் என்று சூதாட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர். ஆஸ்திரேலியாவுக்கு அடுத்து தென்னாபிரிக்க அணி உள்ளது.

தென்னாபிரிக்கா வெற்றி பெறும் என்று 4 ரூபா கட்டினால் 14 ரூபா கிடைக்கும்.

இந்திய அணி மீது ஒரு ரூபா பந்தையம். அந்த அணி வெற்றி பெறும் பட்சத்தில் 9 ரூபா கிடைக்கும். இதற்கு அடுத்த இடங்களில் வரிசைப்படி இங்கிலாந்து, பாகிஸ்தான், இலங்கை, நியூஸிலாந்து, மேற்கிந்திய தீவுகள், சிம்பாப்வே, அணிகள் உள்ளன.

சிம்பாப்வே அணி கிண்ணத்தை கைப்பற்றும் வாய்ப்புக் குறைவு என்பதால் அந்த அணி மீது ஒரு ரூபா கட்டினால் அது வெற்றி பெற்றால் 41 ரூபா தருவதாக சூதாட்டக்காரர்கள் கூறுகின்றனர்.

பாகிஸ்தான் அணி மீது ஒரு ரூபா கட்டினால் 11 ரூபா தருவதாகவும் இலங்கை மீது ஒரு ரூபா கட்டினால் 13 ரூபா தருவதாகவும் சூதாட்டக்காரர்கள் கூறுகின்றனர்.

பாகிஸ்தானும் இங்கிலாந்தும் சூதாட்டத்தில் சமநிலையில் உள்ளன.

சமீபத்தில் நடைபெற்ற போட்டிகளில் இந்தியாவை வீழ்த்திய போதும் நியூஸிலாந்துக்கு அதிக மவுசு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-5)



உலகக் கிண்ண கிரிக்கெட் ஆட்டங்கள் 8 ஆம் திகதி ஆரம்பிக்கின்றன. வெற்றி பெறும் அணிக்கு வழங்கப்படவுள்ள உலகக் கிண்ணத்துடன் இந்திய அணித் தலைவர் கங்குலி.

# உலகக்கிண்ணக் கிரிக்கெட் ஆரம்பவிழா மைதானம் பொலீஸாரிடம் ஒப்படைப்பு

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஆரம்பவிழா நடைபெறும் மைதானம் பொலீஸார் வசம் ஒப்படைக்கப்பட்டு தீவிர பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாக இன்னும் 9 நாள்களே உள்ள நிலையில் போட்டி ஆரம்பமாக உள்ள நியூலாண்ட்ஸ் மைதானம் பொலீஸார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அங்குலம் அங்குலமாக வெடிமருந்துச் சோதனை நடத்தப்பட்டது. இந்தச் சோதனையை வெடிமருந்து நிபுணர்கள் குழுவும், மோப்பநாய்கள் குழுவும் நடத்தின.

இது குறித்துப் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், ஆரம்ப விழா நடைபெறும் மைதானத்தினுள் நுழைபவர்கள் யாராக இருந்தாலும் சரி, மைதானத்தில் வேலைபார்ப்பவர்களாக இருந்தாலும் சரி அல்லது ஆரம்பவிழா ஒத்திகையில் கலந்து கொண்டவ[illegible]ளாக இருந்தாலும் சரி, மைதான [illegible]ழைவாயிலில் விளக்க மளித்த பி[illegible]ரே உள்ளே வரவேண்டும் என்று [illegible]றினார்.

மைதான[illegible]தினுள் நுழைவாயில், பாதுகாப்பு அனைத்தும் நேட்டவுன் பொலீஸார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 9 ஆம் திகதி தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையே முதல் போட்டி நடைபெறுகின்றது. இந்தப் போட்டிக்கான ஏற்பாடுகள் இன்னமும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

ஏறக்குறைய 5 ஆயிரத்து இரு நூறுக்கும் மேற்பட்டோர் கலந்துகொள்ளும் ஆரம்ப விழாவுக்கான ஒத்திகை நடைபெற்று வருகின்றது. 8 வயது சிறுவர் முதல் 86 வயது முதியவர் வரை ஆரம்பவிழா நிகழ்ச்சி ஒத்திகையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆரம்ப விழாவிற்காக 15,000 ரிக்கெட்டுக்களில் 5,000 ரிக்கெட்டுக்கள் விற்பனை செய்யப்படாமல் உள்ளன. பெப்ரவரி 15ஆம் திகதியன்று நடைபெறவுள்ள கனடா - கென்ய அணிகளுக்கிடையே நடைபெறும் போட்டிக்கான ரிக்கெட்டுகள் தவிர பிறபோட்டிக்கான ரிக்கெட்டுக்கள் விற்றுத் தீர்ந்துவிட்டன.

தொலைக்காட்சி [illegible] ஏறக்குறைய 140 கோடி [illegible]கள் ஆரம்ப விழாவைக் கண்டுகளி[illegible]ர்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)




## உலகக் கிண்ண கிரிக்கெட்

# உலகக்கிண்ணக் கிரிக்கெட் இன்னும் 9 நாள்களில்

லண்டன்,ஜன.30

இதுவரை நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் நியூஸிலாந்து வீரர் ஜி.அலொட், ஆஸ்திரேலிய வீரர் ஷேன்வோர்ன் ஆகியோர் ஒரு தொடரில் 20 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளனர்.

இலங்கை வீரர்களில் அசந்த டிமெல் முன்னணியில் உள்ளார்.

உலகக் கிண்ணக்கிரிக்கெட்டில் ஒரே தொடரில் கூடுதலான விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர்கள் விவரம் பின்வருமாறு:-

| வீரர் | அணி | போ. | ஓவர் | ஓட்டம் | விக். | சி.பெ |
|---|---|---|---|---|---|---|
| ஜி.அலொட் | (நியூஸி.) | 99 | 87.4 | 325 | 20 | 4-37 |
| ஷேன்வோர்ன் | (ஆஸி.) | 99 | 94.2 | 361 | 20 | 4-29 |
| ரோஜர்பின்னி | (இந்தி.) | 83 | 88 | 336 | 18 | 4-29 |
| வஸிம் அகரம் | (பாக்.) | 92 | 89.4 | 338 | 18 | 4-32 |
| சி.மெக்டமர்ட் | (ஆஸி.) | 87 | 73 | 341 | 18 | 5-44 |
| கிளென்மெக்ராத் | (ஆஸி.) | 99 | 95.4 | 367 | 18 | 5-14 |
| இம்ரான்கான் | (பாக்.) | 87 | 49.5 | 222 | 17 | 4-37 |
| அசந்தடிமெல் | (இலங்.) | 83 | 66 | 265 | 17 | 5-32 |
| மதன்லால் | (இந்தி.) | 83 | 83 | 285 | 17 | 4-20 |
| எல்.குளூஸ்னர் | (தெ.ஆ.) | 99 | 75.5 | 350 | 17 | 5-21 |
| சக்லைன்முஸ்தாக் | (பாக்.) | 99 | 83.4 | 379 | 17 | 5-35 |
| இயன்பொத்தம் | (இங்.) | 92 | 89 | 306 | 16 | 4-31 |
| முஸ்தாக்அஹமட் | (பாக்.) | 92 | 78 | 311 | 16 | 3-41 |
| அலன்டொனால்ட் | (தெ.ஆ.) | 99 | 82 | 325 | 16 | 4-17 |
| கிறிஸ்ஹரிஸ் | (நியூசி.) | 92 | 72.1 | 342 | 16 | 3-15 |
| சொஹைப் அக்தார் | (பாக்.) | 99 | 80.5 | 392 | 16 | 3-11 |
| அனில் கும்ளே | (இந்தி.) | 96 | 69.4 | 281 | 15 | 3-29 |
| வஸிம் அக்ரம் | (பாக்.) | 99 | 90.4 | 342 | 15 | 4-40 |

# இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு விமரிசையான வழியனுப்பு விழா

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்காக தென்னாபிரிக்காவுக்குச் செல்லவுள்ள இலங்கைக் கிரிக்கெட் அணியை வாழ்த்தி வழியனுப்புவதற்காக விமரிசையான வைபவமொன்று இன்று நடைபெறவுள்ளது.

இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சும் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் இணைந்து இவ்வைபவத்தை ஏற்பாடு செய்துள்ளன.

சுதந்திர சதுக்கத்தில் இன்று மாலை 3.00 மணிக்கு இவ்வைபவம் ஆரம்பமாகவுள்ளது.

மாலை 3.05 மணிக்கு இலங்கை கிரிக்கெட் அணியினர் பாடசாலை கிரிக்கெட் அணிகளால் வரவேற்கப்படுவர்.

அதன்பின், பாடசாலை கிரிக்கெட் அணித்தலைவர்களால் இலங்கை வீரர்கள் மேடைக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

3.30 மணியளவில் விளையாட்டுத்துறை அமைச்சர், கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபைத்தலைவர், பிரதம நிறைவேற்றதிகாரி ஆகியோரினால் வீரர்கள் வரவேற்கப்படுவர்.

விளையாட்டுத்துறை அமைச்சின உரையைத் தொடர்ந்து இலங்கை அணிக்கு வாழ்த்துத் தெரிவித்து பாரிய துடுப்பு ஒன்றில் கையெழுத்திடும் நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது. பிற்பகல் 4.10 இற்கு இலங்கை அணித் தலைவர் சனத் ஜயசூரிய உரை நிகழ்த்தவுள்ளார்.

சுமார் பத்து பாடசாலை பாண்ட் வாத்தியக் குழுக்கள் இவ்வைபவத்தில் பங்குபற்றவுள்ளன.

இதேவேளை, இலங்கை அணிக்கு வாழ்த்துத் தெரிவித்து ரசிகர்கள் கையெழுத்திடுவதற்கு 4 பாரிய துடுப்புகள் நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பப்படவுள்ளன. இத்துடுப்புகள் எதிர்வரும் 9 ஆம் திகதி இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் கையளிக்கப்படவுள்ளன.

## விளையாட்டு

# சிறந்த வீரருக்கா[illegible]ன 'சியட்' விருது மீண்டும் முத்தையா முரளிதரனுக்கு!



லண்டன்,ஜன.30

இலங்கை வீரர் முத்தையா முரளிதரன் 2001 - 2002 ஆம் வருடத்தின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான 'சியட்' வி[illegible]தை வென்றுள்ளார்.

[illegible]ந்த செவ்வாயன்று இரவு மும்[illegible]ல் நடைபெற்ற விழாவொன்[illegible] இவ்விருது வழங்கப்பட்டது. [illegible]வேளை சிறந்த பந்துவீச்சாள[illegible] விருதையும் முரளிதரன் [illegible].

[illegible] - 2001 ஆம் வருடத்தில் இவ்விரு விருதுகளை முரளிதரனே வென்றமை குறிப்பிடத்தக்கது. சிறந்த வீரருக்கான 'சியட்' விருதை வென்ற முதலாவது இலங்கை வீரர் முரளிதரன ஆவார்.

1996 முதல் 'சியட்' விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் மே முதலாம் திகதியிலிருந்து அடுத்த வருடம் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நடைபெற்ற போட்டிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் இவ்விருது வழங்கப்படுகிறது.

இவ்வருடத்தின் சிறந்த சர்வதேச துடுப்பாட்ட வீரருக்கான விருதை சச்சின் டெண்டுல்கருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ், நூற்றாண்டின் சிறந்த இந்திய வீரருக்கான விருதை வென்றார்.

நூற்றாண்டின் சிறந்த இந்திய கிரிக்கெட் வீரருக்கான விஸ்டன் விருதை அண்மையில் கபில்தேவ் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு முழுவதும் சர்வதேச கிரிக்கெட்டில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிய ஆஸ்திரேலிய அணி, சிறந்த அணிக்கான விருதை பெற்றுள்ளது. சிறந்த அணிக்கான 'சியட்' விருதை ஆஸ்திரேலிய அணி பெறுவது இது மூன்றாவது முறையாகும்.

இதற்கு முன்பு 1998, 1999, 2002 ஆகிய வருடங்களில் ஆஸ்திரேலியா சிறந்த அணிக்கான விருதை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறந்த களத்தடுப்பாளருக்கான விருது ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கி பொன்ரிங்கிற்கு வழங்கப்பட்டது.

மேலும், இந்திய அணியின் முன்னாள் தலைவர் பிஷன் சிங் பேடிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி 'சியட்' நிறுவனம் கௌரவித்துள்ளது.

போட்டியில் வெற்றியீட்டுவதற்கான சிறந்த திறமை வெளிப்பாட்டிற்குரிய 'சியட்' விருது இந்திய அணியின் அதிரடி வீரர் வீரேந்தர் ஷேவாக்கிற்கு வழங்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற 'கோகா கோலா' போட்டியில் நியூஸிலாந்திற்கு எதிராக 89 பந்துகளில் 100 ஓட்டங்களை எடுத்ததற்காக இந்த விருது ஷேவாக்கிற்கு வழங்கப்படுகின்றது.

விருது பெற்றவர்களுக்குப் பரிசுக் கிண்ணங்களும் சுமார் 20 லட்சம் இந்திய ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டன.

வழமையாக 10 பிரிவுகளில் இவ்விருது வழங்கப்படும். இம்முறை மேலதிகமாக கிரிக்கெட்டை மிகவும் ஊக்குவிக்கும் முகமாக செயற்பட்டமைக்கான விருதும் சிறந்த இந்திய அணித் தலைவருக்கான விருதும் வழங்கப்பட்டன.

முரளிதரனுக்கு நடிகர் அமீர்கான், விருதை வழங்கினார்.

# யாழ். குடாநாட்டிலும் பெண்கள் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பதிவு செய்த கழகங்களுக்கிடையில் பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இம் முறை முதல் முதலாக நடத்தப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உலக அரங்கில் மகளிர் உதைபந்தாட்டம் புகழ்பெற்றதாக இருந்த போதும் எம்மிடையே அது பெரிதும் செல்வாக்கு செலுத்தவில்லை.

கலாசாரம் மற்றும் அடிப்படைவாதக்கருத்துக்கள் காரணமாக பெண்கள் உதைபந்தாட்டம் குறித்து அதிக அக்கறை காட்டப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய நாடுகளில் பெண்களுக்கு பெரும் பணத்தையும் புகழையும் ஈட்டித்தரும் ஒரு விளையாட்டாகவும் உதைபந்தாட்டம் இருக்கின்றது. ஆனாலும் உலக புகழ்பெற்ற உதைபந்தாட்ட வீரர் ரொனால்டோவின் மனைவியும் ஓர் உதைபந்தாட்ட வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-5)

# உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.30

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4மணிக்கு அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகமும், கலட்டி விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

(ம-5-173-182)

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பதிவுசெய்த கழகங்களுக்கிடையில் நடை பெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி முதல் யாழ்துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

- பிற்பகல் 4 மணி கொய்யாத் தோட்டம் வி.க. எதிர் யுத்கா்மல் வி.க.
- பிற்பகல் 5 மணி சென் அன்ரனீஸ் வி.க எதிர் சென்மேரிஸ் வி.க.

# புதிய ஒப்பந்தத்தை உருவாக்கும் எண்ணம் ஏதும் அரசுக்கு இல்லை!

அரசு - புலிகளுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஒரு வயதாகப் போகிறது. அது மிகவும் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகிறது. இந்த ஒரு வருடகாலத்தில் எந்த விதமான மோதல்களும் இல்லை; உயிர் இழப்புகளும் இல்லை. இதனைத் தென்பகுதி மக்களும் பெரிதும் வரவேற்கின்றனர்.

இப்படி ஒரு பயனுள்ள ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டு புதிய ஒப்பந்தம் ஒன்றை செய்யும் நோக்கம அரசுக்கு இல்லை. அதேவேளை, இந்த ஒப்பந்தத்தில் உள்ள ஒரு சில குறைபாடுகளை நீக்கும் வகையில் சில புதிய விடயங்களும் அதில் உள்ளடக்கப்படும். - இப்படிக் கூறுகிறார் அமைச்சர் பீரிஸ்.

நேற்று தொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் இப்படிக் கூறினார்.

'உடன் படிக்கையின் பின் பல்வேறு யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெற்றுள்ளன. புலிகளுக்கும் - இராணுவத்தினருக்கும் இடையில் பெரும் முரண்பாடுகள் தோன்றியுள்ளன. இந்த நிலையில் அரசு புதிதாக ஓர் ஒப்பந்தம் செய்யவிருப்பதாக நம்பப்படுகிறது. இது உண்மையா?' என்றே நிருபர்கள் கேட்டனர்.

அது தவறு. பல்வேறு நாடுகளில் பல ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப் பட்டுள்ளன. அவை அனைத்தும் எழுத்துக்கு எழுத்து நடைமுறைப்படுத் தப்படவில்லை. அப்படி எதிர்பார்ப்பது நடவாத காரியம்.

ஜனாதிபதி குமாரதுங்க முன்னா புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் 3 மாதகாலங்கள் கூட நீடிக்க வில்லை. ஆனால் பிரதமர் ரணில் செய்கொண்ட ஒப்பந்தம் ஒருவருடத்தை எட்டிப்பிடித்துவிட்டது. அது உயிர் இழப்புகளைத் தடுத்துள்ளது. அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளது, அமைதியை எற்படுத்தியுள்ளது. படையினரும் பெரும்பான்மை மக்களும் அதனை வரவேற்கின்றனர். எனவே, இந்த ஒப்பந்தத்தை மாற்றியமைக்கவோ அல்லது புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்யவேண்டிய அவசியமோ இல்லை.

இந்த ஒப்பந்தத்தில் நன்மைகளை சித்திரிக்கும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நாடளாவிய ரீதியாகவும் அரசு மேற்கொள்ளவிருக்கின்றது - என்றும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

# மீண்டும் செனற்சபை அமைக்க அரசு திட்டம்

கொழும்பு.ஜன.30

மிகவும் பழைமையான தேர்தல் முறைகள் மாற்றி அமைக்கப்படும். நாடாளுமன்றத்துடன் மேலதிகமாக செனட்சபை ஒன்றை மீண்டும் அமைக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே, நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 'தேர்தல் மறுசரமைப்பு திருத்தச்சட்டம்' தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும், பிரதிநிதி களுடனும், பிரதமர் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகிறார்.

இதன் அடிப்டையிலேயே எரிசக்தி மின்வலு அமைச்சர் கரு ஜயசூரிய தலைமையில் நாடாளுமன்ற உபகுழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் உட்பட சகல கட்சிகளையும் பிரதிநித்துவப்படுத்தக்கூடிய வகையில் எட்டு உறுப்பினர்கள் இடம்பெறுகின்றனர்.

தொகுதிவாரித்தேர்தல், விகிதாசாரத்தேர்தல், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, இடைத் தேர்தல்களை நடத்துதல், வாக்களிப்பின்போது தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்துதல் மற்றும் ஏற்கனவே நடைமுறையில் இருந்த செனட் சபையை (மேல்சபை) உருவாக்குதல் போன்ற விடயங்கள் குறித்து இந்த நாடாளுமன்ற உபகுழு பரிசீலனை செய்து இறுதி அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்.

இந்த அறிக்கையின் சிபாரிசுகள் அனைத்தும் அரசியல் கட்சிகளினதும ஆதரவுடன் நடை முறைப்படுத்தப்படும் என அமைசசரவைப்பேச்சாளர், அமைச்சர் ஜீ.எல்.பிரிஸ் செய்தியாளர்களிடம் கூறினார். (ஐ)

# உதவும் நாடுகளின் ஜப்பான் கூட்டத்தில் எதிர்பார்த்ததைவிட அதிகம் கிடைக்கும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிக்கும் நம்பிக்கை இது

நாம் எதிர்பார்த்ததைவிட அதிகமானதொகை நிதி உதவி, ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கிடைக்கும் என அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று நம்பிக்கை தெரிவித்தார்.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு எதிர்வரும் ஜீன்மாதம்16, ஆம் 17ஆம்,திகதிகளில் ஜப்பானில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் பலரும் கலந்துகொள்வர்.

கடந்த டிசெம்பர் மாதம் ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதான ஆதரவு மாநாட்டின் மூலம் இலங்கை அரசு மீது ஐரோப்பிய நாடுகள் கொண்டிருந்த சந்தேகங்கள் தீர்க்கப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இம்மாநாட்டில் கலந்து கொண்டு சமாதான நிலைமையை வெளிப்படுத்தினார். இதனால், ஆரம்பகட்ட உதவியாக எட்டரைக்கோடி டொலர்கள் கிடைத்தன.

ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்குச் சிறப்பான ஓர் அடித்தளமாக அமைந்தது ஒஸ்லோசமாதான ஆதரவு மாநாடு.

இங்கு சமாதானம் ஏற்பட்டதன் நினைவாக ஐரோப்பிய நாடுகள் எமது அபிவிருத்திக்காக பெரிதும் உதவ முன்வந்துள்ளன. பிரித்தானிய அரசு ஒன்றரைக்கோடி ஸ்ரேலிங் பவுணையும்,சுவிஸ் 75லட்சம் பிராங்குகளையும் வழங்கியுள்ளன. இந்த உதவி உட்கட்டமைப்பு, கல்வி அபிவிருத்தி, பொதுவசதிகள் போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படும்.

அண்மையில் ஜப்பான் மூன்றரைக்கோடி அமெரிக்க டொலர்களை வடக்கு-கிழக்கு சமாதான செயலகத்திற்கு வழங்கியுள்ளது. இது புலிகளுக்கு வழங்கப்பட்டதென பிரசாரப்படுத்துவது தவறு! -என்றும் அமைச்சர் பீரிஸ் கூறினார். (ஐ-4)

# சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி,ஜன.30

மட்டுவில் வடக்கு லூர்து மாதா ஆலய வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை பூசை, திருச்சொரூபப் பவனி என்பன சாவகச்சேரி பங்குத்தந்தை தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-31)

★ ★ ★

வடமராட்சி,ஜன.30

கத்தோலிக்க மக்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான பருத்தித்துறை தும்பளை லூர்து மாதா தேவாலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும் இந்த உற்சவத்தின் நவநாள ஆராதனைகள் தினமும் மாலை 5.15மணிக்கு திருச் செபமாலையுடன் நடைபெறும். 11ஆம் திகதி காலை 6.30மணிக்கு முதற் திருப்பலியும், இரவு 7.30மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும். (எ-173)

★ ★ ★

குருநகர்,ஜன.30

குருநகர் புதுமை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற உள்ளன.

அன்று காலை 5.30 மணிக்கு முதலாம் திருப்பலியும் தொடர்ந்து திருநாள் திருப்பலி கலை 7.30 மணிக்கும் நடைபெறும். 2ஆம் திகதி ஞாயிற்றுக கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும், நற்கருணைப் பவனியும் இடம்பெறும்.

இந்த ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தற்போது மாலை நேரங்களில் நவநாள் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. (ஐ-51)

# உணவு விடுதியில் கும்பல் அட்டகாசம்!

யாழ்ப்பாணம்,ஜன.30

திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள உணவு விடுதி ஒன்றில் நேற்றிரவு இடம்பெற்ற தகராறில் குடும்பஸ்தர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி தலையில் படுகாயமடைந்தார்.

குறித்த விடுதிக்குள் வாள்கள், பொல்லுகள் சகிதம் திடீரென புகுந்த கும்பல் ஒன்று விடுதியின் சொத்துக்களை உடைத்து அட்டகாசம் புரிந்தது. அத்துடன் அங்கிருந்த ஒருவரை வாளால் வெட்டி காயப்படுத்தியது.

இந்தச் சம்பவத்தில் அரியாலையைச் சேர்ந்த வைரவி விக்னராஜா (வயது 49) என்பவரே படுகாயமடைந்தார். இவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். (ஐ-4)

# உடனடித் தேர்தலை சு.க. விரும்பவில்லை

## அதன் பொதுச்செயலாளர் கூறுகிறார்

கொழும்பு,ஜன.30

நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு ஜே.வி.பி. இயக்கம் எம்மிடம் கோரவில்லை. இப்போதைய நிலையில் புதியதொரு தேர்தலை சந்திக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி விரும்பவில்லை. - இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கின்றார்.

ஊடகங்கள் குறிப்பிடுவது போல நாம் ஜே.வி.பியினருடன் எவ்வித உடன்பாட்டுக்கும் இன்னும் வரவில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்தே எமது நிலைப்பாடு தொடர்பாக முடிவெடுப்போம்.

ஜே.வி.பியினரின் பேச்சுக்கு இசைந்து நாம் செயற்படுவதாகக் கூறுகிறார்கள். அது தவறு. ஆட்சியைக் கலைத்து புதிய அரசொன்றை நிறுவும் எண்ணம் இப்போதைக்கு எமக்கு இல்லை.

எந்தப் பொது உடன்பாட்டுக்கு வந்தாலும், பொதுஜன ஐக்கிய முன்னணியை புறக்கணித்துச் செயற்படும் எண்ணம் எமக்கு ஒரு போதும் இருந்ததில்லை.

ஜே.வி.பியினருடன் பல தடவைகள் பேச்சு நடத்தியுள்ளோம். அவர்கள் கூறுவதற்கெல்லாம் நாம் இசைந்து போனால் எமது கட்சியின் தனித்துவத்திற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும். - இப்படி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (ஐ)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 12 07 1978



உதிர்வு 17 12 2002

## திருமதி பவனீதரன் சிவமதி (விஜி)

எங்கள் மகளே!
அன்புச் செல்வமே!
பத்தினித் தெய்வமே!

உன் உறவுதனைத் தேடி பிரான்ஸ் செல்வாய் என்றிருந்தோம்.
ஆனால் - சித்தப்பா குடும்பத்தினருடன் விண்ணுலகம் சென்றதேனோ?
இப் பூவுலகம் மீண்டும் வந்து உடுவில் சித்தி விநாயகர்
தொண்டுதனை செய்யாயோ?
உன் ஆத்மா சாந்தியடைய சித்தி விநாயகரை பிரார்த்திப்போமாக.

உன்பிரிவால் துயருற்றிருக்கும்
அப்பா, அம்மா, கணவர்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனன், மைத்துனி,
மருமகன்.

உடுவில் தெற்கு,
பாலவோடை,
மானிப்பாய்.

(13881)


## தேவை

வெல்டிங்வேலைக்கு ஆள்கள் தேவை. அத்துடன் உதவி ஆள்களும் தேவை. உடன்நேரில்வரவும்.
தொடர்புகளுக்கு:
தர்சிகா வெல்டிங் வேக்ஸ்,
இல.21, பீச்றோட்,குருநகர். (13878)

## விற்பனைக்கு

எமது சொந்தப் பாவனையில் உள்ள 500-இலக்கமுடைய சாலி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
7/1,ஈச்சமோட்டைவீதி,
யாழ்ப்பாணம். (13880)

## ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
விஜய், சிநேகா, வடிவேல்,
மணிவண்ணன்
வசீகரா
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கற்றுக்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நிறைஞ்சனாஸ் சங்கானை

குணால், லோறன்ஸ், தாமு, வையாபுரி நடித்த
அற்புதம் (ரீலஸ்)
கா.நே. : 11.00,2.45,6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மட்டும்
TOMB RAIDER (ம-26093)

## நாகம்ஸ் சுன்னாகம்.

இன்று மட்டும
சூர்யா, ஜோதிகா, நடிக்க
உயிரிலே கலந்தது (ரீலஸ்)
காட்சிகள் தினசரி: 11.00, 3.00, 6.30 (பு.நேரம்).
நாளைமுதல் நெஞ்சினிலே (13887)


# மரண அறிவித்தல்கள்

## வீரவேங்கை இளங்கீரன்

**(செல்வராஜா மகநந்தன்)**

*(கைதடிகிழக்கு, கைதடி.)*

நேற்றுமுன்தினம் (28.01.2003) செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டத்தில் சுகயீனம் காரணமாக சாவடைந்துள்ளார்.

தகவல்:
உறவினர்.

(சி-26283)

## திருமதி சுப்பிரமணியம் பாக்கியம்

காரைநகர் களபுமி பாலவோடையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கலேவெலயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் பாக்கியம் அவர்கள் நேற்று (29.01.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கனகசபை சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி மார்க்கண்டு சுந்தரம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி கனகசபை வள்ளியம்மையின் அன்பு மருமகளும், அன்னலட்சுமி, மார்க்கண்டு (London), மனோகரன் (Monoj Express G.S.A.Serendib Air line (Lion air Mano), 67A, ஆட்டுப்பட்டித தெரு கொழும்பு - 13, இல. 13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், மார்க்கண்டு ஸ்ரோர்ஸ் கலேவெல), தனலட்சுமி, அரசரத்தினம் (இறுதி யாண்டு மாணவன் பொறியியற் பீடம் பேராதனை) ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னம்மா, பாலசுப்பிரமணியம், இராமநாதன், மயில்வாகனம் (மார்க்கண்டு அன் சன்ஸ் கிளிநொச்சி, வவுனியா), செல்லம்மா (London), தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நடராசா, இராஜேஸ்வரி, சந்தானலட்சுமி, சோமசேகரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகரில் நடைபெறும்.

இறுதிக்கிரியைகள் பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சு.மனோகரன் (மகன்)

(C/26284)

# 'அல்கெய்டா' பயங்கரவாதிகள் புலிகள் போன்றவர்கள் அல்லர்!

## அவர்களோடு பேச முடியாது என்கிறார் பிரிட்டிஷ் அமைச்சர்

"அல்கெய்டா பயங்கரவாதிகள் வித்தியாசமானவர்கள். அவர்கள் தனிரகம் ஐ.ஆர்.ஏ., விடுதலைப் புலிகள போன்றவர்களுக்கு அரசியல் இலக்குகள் உண்டு. அல்கெய்டா பயங்கரவாதிகளின் இலக்கு வேறு. அதுபற்றி அவர்களுடன் பேசித் தீர்வு காண முடியாது.திரிபுபடுத்தப்பட்ட 'ஷரிஅத்' சட்டத்தை ஏற்றுக்கொள்ள விரும்பாத சமூகங்கள் மீது அந்த சட்டத்தை இழைக்க அல்கெய் டாவினர் விழைகிறார்கள்".

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு அலுவலகத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான அமைச்சர் மைக் ஒபேரியன் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் "சர்வதேசப் பாதுகாப்புக்கு புதிய அச்சுறுத்தல்கள்" என்ற தலைப்பில் அவர் உரையாற்றினார்.

இலங்கை அரசு எடுத்திருக்கும் சமாதான நடவடிக்கைக்கு நோர்வே வழங்கும் பூரண ஒத்துழைப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

சர்வதேசப் பாதுகாப்புக்குப் புதிய அச்சுறுத்தல்களை பல நாடுகள் எதிர்கொள்கின்றன. தீவிரவாதிகளுடன் அரசுகள் நடத்தும் சமாதான பேச்சுக்கள், அமைதி முயற்சிகள் போன்றவை மூலமே இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு ஆக்கபூர்வமான - நியாயமான - தீர்வுகளை காணமுடியும்.

பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட அனுபவம் பிரிட்டன், இலங்கை ஆகிய இரண்டு நாடுகளுக்கும் உண்டு. சமாதான பேச்சு மூலமே இவற்றிற்கு தீர்வுகாண முடியும் என்பது எனது நம்பிக்கை.

இவ்வாறு மைக் ஒபேரியன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைதல், கரும்புலிகள் அமைப்பைக் கலைத்தல் ஆகியவை வலியுறுத்தப்படுவது குறித்துக் கேள்வி எழுப்பப்பட்ட போது அது குறித்துக் கருத்துத் தெரிவிக்க ஒபேரியன் மறுத்து விட்டார்.

இத்தருணத்தில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்துக் குட்டையை குழப்ப தான் விருப்பவில்லையெனவும்-

இந்த விவகாரம் குறித்துப்பேசித் தீர்க்க வேண்டியவர்கள் விடுதலைப் புலிகளும் அரசு தரப்பினருமே எனவும் - அவர் பதிலளித்தார்.

சிறுவர்களை இராணுவத்தில் சேர்ப்பது குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது - விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமல்ல எந்த இயக்கமும் சிறுவர்களை இராணுவத்தில் சேர்ப்பது தவறு என மைக் ஒபேரியன் தெரிவித்தார். (ஐ)

# ஜனாதிபதி இன்று நடாளுமன்றத்தில்

கொழும்பு,ஜன.30

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் அமைச்சர் மிலிந்த மொறகொடவையும் சந்தித்துப் பேசுவார். இந்தச் சந்திப்பு நாடாளுமன்றத்தில் நடைபெறும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அரசியல் விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுக் கூறினார்.

அமைச்சரவைத் தீர்மானங் களை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர் மாநாடு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது அமைச்சர் பீரிஸ் இதனைக் கூறினார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:-

அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் ஜேர்மனியில் உள்ள பேர்லினில இரண்டு நாள்கள் மட்டுமே நடைபெற்றாலும் ஆக்பூர்வமான நிறைய விடயங்கள் ஆராயப்படும்.

அகதிகள் மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, அபிவிருத்தி நடவடிக்கை கள் தொடர்பான உபகுழுவின் அறிக்கையும் அங்கு பரிசீலினை செய்யப்படும்.

இந்திய இராணுவ ஆலோசகர் சதீஸ் நம்பியாரின் அறிக்கை அதற்குள் கிடைத்துவிட்டால் அது தொடர்பாகவும் சிலவேளை புலிகளுடன் கலந்துரையாடப்படலாம்.

அமைச்சர் மிலிந்த மொறகொட கிழக்கு மாகாணத்திற்குச் சென்று நிலைமைகளை அறிந்து வந்துள்ளார். புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையிலான உறவு சுமுகமாக இருக்கின்றது என அமைச்சர் தெரிவித்தார். (எ)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் அதிகார அலகு, அரசியல் தீர்வில் எமக்கு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

வடக்கு - கிழக்குக்கு வெளியே தென்னிலங்கையில் சிதறி வாழும் எமது சகோதர முஸ்லிம் மக்களது சமூக, பொருளாதார, அரசியல், கலாசார உரிமைகள் நியாயமான முறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதற்காகக் குரல் எழுப்புவதும் போராடுவதும் எமது கடப்பாடு ஆகும்.

இப்படி பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உடனடி கோரிக்கைகள்

★ சமஷ்டித் தீர்வில் முஸ்லிம்களின் சுயாட்சி பிரகடனம்.

★ அபிவிருத்தி நிதியில் முஸ்லிம்களுக்கு பங்கு.

★ முஸ்லிம்களின் தலைமைத் துவங்களின் ஒற்றுமை.

★ சமாதான பேச்சுக்களில் தனித்தரப்பாக பங்கு கொள்ளுதல்.

★ இறுதித்தீர்வுக்கு முஸ்லிம்களின் சம்மதம் பெறவேண்டும். (ஐ)

## சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவும் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கைதிகள் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தமது கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் அன்றிலிருந்து சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாகவும் அந்தக் கடிதத்தில் கைதிகள் எச்சரித்துள்ளனர். (ஐ-4)

## கண்டித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்திருக்கின்றன.

தீவகமக்கள் நலன் காப்பகம், யாழ்மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், வலிகாமம் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், வலி. கிழக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம்,தென்மராட்சி வணிகர் கழகங்களின் ஒன்றியம், வலி.கிழக்கு தென் பகுதி பல நோ.கூ. சங்கம், அச்சுவேலி - ஆவரங்கால் வர்த்தகர் சங்கம், யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியன நேற்று கண்டன அறிக்கைகளை விடுத்தன. (ஐ-எ)

## டக்ளஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை பிரதமரிடம் எடுத்துரைத்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பெப்ரவரி 10ஆம் திகதியுடன் உள்ளூராட்சி சபைகளின் ஆயுள் காலம் காலாவதியாக விடப்படும். விசேட ஆணையாளர்களின் பொறுப்பில் அவை இயங்கும். புதிய சட்டம் கொண்டுவரப்பட்டு புதிதாக வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தேர்தல் நடத்தப்படும் - என்று பிரதமர் உறுதியளித்தார் என அமைச்சர் மகேஸ்வரன் பின்னர் தெரிவித்தார். (ஐ)

## முஸ்லிம்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், மௌலவிகள், பொதுமக்கள் என்று பலதரப்பட்டவர்களும் நிகழ்வுகளில் கலந்துகொண்டார்கள்.

பேரணிகள் பாலமுனையிலிருந்தும் அட்டப்பள்ளத்திலிருந்தும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி 10 மணியளவில் ஒலுவில் தென்கிழக்கு பல்கலை வளாக முன்றிலை வந்தடைந்தன.

பேரணியில் கலந்து கொண்டோர் பதாகைகளையும், சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர். கோஷங்களை எழுப்பிச் சென்றனர்.

காலை 10.30 மணியளவில் 'நாரே தக்பீர் அல்லாஹு அக்பர்' முழக்கம் வானைப் பிளக்க தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர் பேரவைத் தலைவர் முஹம்மது நவாம் தலைமையில் முஸ்லிம் தேசப் பிரகடனம் செய்து மக்களின் அங்கீகாரம் பெறும் நிகழ்வு வெகுஉணர்ச்சிபூர்வமாக நடைபெற்றது.

முஸ்லிம்களின் தேசிய எழுச்சியையும் அரசியல் அபிலாஷைகளையும் உள்ளடக்கியதாகப் பிரகடனம் அமைந்திருந்தது.

கடந்த காலத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட உயிர் மற்றும் சொத்து இழப்புக்களை அறிவிக்கும் வகையிலான நினைவுச் சின்னமும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இவற்றுடன் வளாக முன்றிலில் பொதுக்கூட்டமும் நடந்தது. (ஐ)

# மிருசுவில் படுகொலை வழக்கு: சாட்சி பயத்தினால் வரவில்லை

## அரச சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.30

மிருசுவில் படுகொலைகள் வழக்கு மீதான 'ட்ரயல் அட்பார்' விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் நடைபெற்றது. சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஐந்து இராணுவத்தினரும் மன்றில் ஆஜராக்கப்பட்டனர். அவர்களுக்கு எதிரான வழக்கு அடுத்தமாதம் 10ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

நேற்றைய விசாரணையின்போது குற்றப்பத்திரிகை எதிரிகளுக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டது. இவர்களுக்கு எதிராக 19 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டிருந்தன,

மேல்நீதிமன்ற நீதிபதிகள் ஐ.எம். இமாம் (தலைவர்), சரத் அம்பேபிடிய, குமார் ஏக்கரட்ன ஆகியோர் இவ் வழக்கை விசாரணை செய்துவருகின்றனர்.

நேற்றைய விசாரணையின் போது அரசு தரப்பில் ஆஜராகியிருந்த சிரேஷ்ட அரச சட்டவாதி சரத் ஜயமான இந்த வழக்கின் முக்கிய சாட்சியான இரண்டாவது சாட்சி நீதிமன்றில் சமூகமளிக்கவில்லையெனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2ஆம், 3ஆம், 4ஆம் சாட்சிகளில் இரண்டாவது சாட்சியே முக்கியமானவர். சம்பவத்தைக் கண்கூடாகப் பார்த்தவர். ஆனால், பயம் காரணமாக அவர் இன்று இந்த நீதிமன்றத்திற்கு சமுகமளிக்கவில்லை.

அவருக்கு ஏதோ ஓர் அச்சுறுத்தல் இருக்கிறது. எனவே, யாழ்ப்பாணத்திலுள்ள பிரதிப் பொலீஸ் மா அதிபர் மூலம் சாட்சிகளை கொழும்புக்கு வரவழைத்து, பின்பு கொழும்பிலுள்ள பிரதிப் பொலீஸ்மா அதிபர் மூலம் அவரை இந்த நீதிமன்றத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமென அரச சட்டவாதி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த வழக்கின் எதிரிகளாக ஆர். எப்ரத்னாயக்க, ஆர்.சேனக முனசிங்க, டி.எம்.ஜயரத்ன, எஸ்.எம். புஸ்பகுமார, காமினி முனசிங்க ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

மேல் விசாரணை அடுத்த 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் கே.ரட்ணவேல், கந்தையா சண்முகலிங்கம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

2000ஆம் ஆண்டு டிசெம்பர் 19 ஆம் திகதி மிருசுவிலைச் சேர்ந்த தேவகுலசிங்கம் (வயது 31), வில்வராஜா (வயது 41), அவருடைய இரண்டு பிள்ளைகளான பிரதீபன் (வயது 15), பிரசாந் (வயது 5), ஞானபாஸ்கரன் பாஸ்கர் (வயது 19), நடேசு ஜெயசந்திரன் (வயது 21), கதிரன் ஞானச்சந்திரன் (வயது 35), அவருடைய மகன் சாந்தன் (வயது 15) ஆகியோர் கழுத்து அறுக்கப்பட்டு, அடித்து எலும்புகள் முறிக்கப்பட்டு, கொடூரமாக சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு, மலக்குழி ஒன்றினுள் அவர்களது சடலங்கள் வீசப்பட்டன. அக்கொடூரச் சம்பவம் தொடர்பான வழக்கே இது.(ஐ)

## ஒஸ்ரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் கருத்து எதுவும் கூறவில்லை. எவ்வாறாயினும், ஜேர்மன் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் அரசாங்கப் பிரதிநிதிகள் யார் என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்று செயலகத்தின் பணிப்பாளரான பேர்னாட் குணதிலக தெரிவித்திருக்கிறார். (ஐ-4)

## டெங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோய் பரவுவது அதிகரிக்கக்கூடிய அபாயம் காணப்படுகிறது - என்று பிரதி சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்தியிருக்கிறார்.

பொதுமக்கள் தங்கள் வீட்டுச் சுற்றாடல்களை தூய்மைப்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கின்றனர். பொது அமைப்புக்களும் தொண்டு நிறுவனங்களும் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளில் விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும் - வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## துணைவேந்தர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளின் விவரங்களை மானிய ஆணைக் குழுவுக்கு அனுப்பிவைக்கும். இம் மூவரில் ஒருவரை ஜனாதிபதி துணைவேந்தராகத் தெரிவுசெய்வார்.

நேற்று நடைபெற்ற வாக்களிப்பின்போது துணைவேந்தர் பதவிக்கு ஒன்பது பேர் போட்டியிட்டனர். ஏனையோரின் விவரம் வருமாறு:-

மருத்துவ பீடாதிபதி பேராசிரியை செல்வி வி.அரசரட்ணம், கிழக்கு பல்கலைக்கழக கணிதத்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.கனகராஜன், யாழ். போதனா மருத்துவமனை சத்திரசிகிச்சைப்பிரிவைச் சேர்ந்த மருத்துவக் கலாநிதி வி.குணாணந்தம், பொறியியலாளர் கலாநிதி வி.எஸ்.இராஜரட்ணம், பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற் பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ்.இரட்ணஜீவன், பேராதனைப்பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா.

துணைவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர்களைச் சிபாரிசு செய்வதற்கான பேரவைக்கூட்டம் கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்தது.

எனினும் இந்தக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு சென்ற பேரவை உறுப்பினரும், 'உதயன்' நிர்வாக இயக்குநருமான ஈ.சரவணபவன் பல்கலைக் கழகமாணவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டார். இதனை அடுத்து பேரவைக கூட்டம் நேற்று புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நேற்றைய பேரவைக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பேரவை உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று பிற்பகல் பல்கலைக்கழகத்துக்கு சென்றிருந்தார். எனினும் அங்கு மாணவர்களால் அவருக்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படுத்தப்படவில்லை. (ஐ-எ-9-10)


# மொபிட்டல் டயலொக் மேசைத் தொலைபேசிகள் விற்பனை





மொபிட்டல் லையின் மேசைத் தொலைபேசி, டயலொக் (சிம்) மேசைத் தொலைபேசி, அலை வரிசைக்குரிய அன்ரனாக்கள்,

மொபிட்டல் Bell Line

டயலொக் Sim Line

என்பன சிறப்பான கழிவுடன் விற்பனை ஆகின்றன.

நாடவேண்டிய இடம் :

Power Cellular

1st Fleat,
No. 185, Kasthuriyar Road, Jaffna.
T.P: 071 399182, 0777242416

(13838)



CHEMISTRY CENTRE

(A/L 2005)

Mon., Fri.

CHE. - 3 - 4 p.m.
PHY. - 4 - 5 p.m.
C.MATHS - 5 - 6 p.m.
BIOLOGY - 5 - 6 p.m.

(4709)


# மரண அறிவித்தல்

## திருமதி மயில்வாகனம் செல்வலட்சுமி

(திருநெல்வேலி)

கலாசாலை வீதி திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி மயில்வாகனம் செல்வலட்சுமி அவர்கள் 28.01.2003 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மீனாட்சிப்பிள்ளை, வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், நல்லூர் MPCS), சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகுரு, சிவரஞ்சினி (தேவி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சக்திவேல் (Cargills (Cey) Ltd.), தேவகாந்தன் (அஞ்சல் திணைக்களம், யாழ்ப்பாணம்), சிவசாந்தி, கௌரி, மஞ்சுளா, லக்சுமிகாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2003) வியாழக்கிழமை கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 1.30 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (13869)

தகவல்
ம.பாலசுப்பிரமணியம் (மகன்)
ம.சிவகுரு (மருமகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.